வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

வார மலர் ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 283 பக்கங்கள் : 20










08 பிரிட்டிஷ் முடியாட்சியின் எதிர்காலம்



09 பைசர் தடுப்பூசி: போலிப்பிரச் சாரங்களை நம்பாதீர்கள்!


10 51வது அமர்வின் புதிய தீர்மானத்துக்கு 2024 செப்டம்பர் வரை அவகாசம்!


11 தடையால் தடுமாறும் புடவை வியாபாரம்...!


# கோட்டாவை விடாமல் துரத்தும் மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள்!

## அரசியலில் ஈடுபடுமாறும் கடும் தொல்லை

கொழும்பு, செப்ரெம்பர் 18

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்கியுள்ள கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லம் சில தினங்களாக மிகவும் பரபரப்பாக காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்ட கட்சியான பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் தினமும் முன்னாள் ஜனாதிபதியைச் சந்திக்க வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதியின் உடல்நிலை குறித்து கேட்டறிவதற்காக சிலர் அவரைச் சந்திக்க வருவதாகவும், அவரை மீண்டும் தீவிர அரசியலுக்கு வருமாறு கோரிக்கை விடுக்க பலர் வீட்டுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அமைச்சர்கள் குழுவொன்று கோட்டாபயவை மீண்டும் அரசியலுக்கு வருமாறு கடுமையாக வலியுறுத்தியுள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

19



# கௌரவமான அரசியல் தீர்வு கோரி வவுனியாவில் நேற்று போராட்டம்!

வவுனியா, செப். 18

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 48வது நாள் கவனயீர்ப்பு போராட்

19

# மேலும் 3.5 மில்லியன் டொலர் இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி

கொழும்பு, செப். 18

இலங்கைக்கு மேலும் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே கடந்த மே 20ஆம் திகதியன்று 3 மில்லியன் டொலர்களை ஜப்பான், இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக வழங்கியிருந்தது

இந்த நிலையில், நேற்று முன் தினம் வழங்கப்பட்ட 3.5 மில்லியன்

19



# திலீபன் நினைவுக்குப் பொதுக்கட்டமைப்பு; பஷீர் காக்கா தலைமையில் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 18

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான பொதுக்கட்டமைப்புக்காக விடுதலைப்புலிகளின் மூத்த போராளி முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா) தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை பொதுக்கட்டமைப்

19

# நியூயோர்க் செல்கிறார் அலி சப்ரி

கொழும்பு, செப். 18

ஐக்கிய நாடுகள் சபையின் 77ஆவது பொதுச்சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி நாளை திங்கட்கிழமை நியூயோர்க் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவுள்ளார். கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமான பொதுச்சபையின் 77 ஆவது அமர்வு செப்ரெம்பர் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய அமைச்சரவை நியமனம்

கொழும்பு, செப். 18

பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளைக் கோரி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கொடுத்து வந்த

19

# தமிழ் அரசியல் கைதிகளின் உணவுத் தவிர்ப்பு நிறுத்தம்!

## வடக்கு ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து

கொழும்பு, செப். 18

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் கைதிகள் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வாக்குறுதிக்கமைய உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளைச் சந்தித்து கலந்துரையாடி விரைவில் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்ததை தொடர்ந்து கைதிகளின்

19

# கோணேஸ்வர ஆலய ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தக் கோரி பாதயாத்திரை

## யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றிரவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 18

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து அடியவர்களின் யாத்திரை நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டது.

19



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நேற்று இந்தப் பத்தியைப் படித்துவிட்டு ஒருவர் சொன்னார், என்ன கத்தியில் நடப்பதுபோல நடந்திருக்கிறீர்கள். ஆனால் சில விடயங்களை நேரடியாக சொல்ல என்ன தயக்கம்? என்று.

அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பதை உடனடியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

தியாகி திலீபனின் நினைவு தினத்தைக் கூட ஒழுங்காக செய்துமுடிக்கக்கூடிய நிலையில் நாம் இல்லை என்ற வருத் தத்தை பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று மாத்திரமே நினைத் தேன். ஆனால் எழுதத் தொடங்கியதும் எல்லாவற்றையும் குறித்துச் சொல்லவேண்டும் போல இருந்தது என்றேன்.

அதைச் சொல்லவில்லை. சுகாஷ், திலீபன் எதற்காக உண்ணா விரதமிருந்தார் என்பதை அவர் தவறாக சொன்னது மாத்திர மல்ல, வரலாற்றையே அறியாமல் அவர் இருக்கிறார் என்பதை இன்னமும் அழுத்தமாகச் சொல்லியிருக்கலாம் என்றார் அவர்.

நமது வரலாறுகள் எல்லாம் எப்படி எழுதப்படுகின்றது என்பதை பற்றி இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒருதடவை எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

நமது - அதாவது ஈழத்தமிழரின் அரசியல் போராட்டத்தில் மிகவும் துயர் படிந்த நாள் என்றால் -

அப்படி பல நாட்கள் இருந்தாலும்,

நம் கண்முன்னே எரிந்து சாம்பல் மேடான யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு மிக முக்கியமானது. ஆனால் அது கூட எப்போது எரிந்தது என்று பலரும் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருப்பது குறித்து முன்னரும் எழுதியிருந்தேன்.

எமது வரலாறுகள் எல்லாமே இப்படித்தான் எழுதப்படு கின்றன. போதாக் குறைக்கு நமக்கு தலைவர்களாக விரும்பு கின்றவர்களும் தத்தமக்கு வாயில் வந்தவாறு வரலாறுகளை எழுதிக்கொண்டிருக்கின்றார்கள்.

நேற்றைய பத்தியில் "ஒற்றையாட்சிக்கும் 13ஆம் திருத்தத் திற்கும் எதிராக உண்ணாநோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தியாகதீபம் அண்ணன் திலீபன் அவர்களின் வழியில் பயணிக்க அவரின் நினைவுநாளில் சபதமெடுப்போம்" என்று சுகாஷ் உரையாற்றியமை பற்றி குறிப்பிட்டிருந்தேன். திலீபன் உண்ணாநோன்பிருந்தது செப்ரெம்பரில் ஆனால் பதின்மூன்றா வது திருத்தம் கொண்டுவரப்பட்டது அதே ஆண்டு நவம்பரில். இந்த வரலாறு சுகாஷுக்கு தெரியாமல் இருக்கலாம். அப் போது சுகாஷுக்கு ஐந்தோ ஆறோ வயதுதான் இருக்கும். ஆனால் அரசியலுக்கு வந்துவிட்ட பின்னராவது விடயங்களை அறிந்துகொண்டு, தெரிந்துகொண்டு பேசவேண்டும் என்பதை அரசியல்வாதியான பின்னராவது தெரிந்துகொள்ளவேண்டி யது அவசியமானது.

இப்போது திலீபனின் நினைவு நிகழ்வை அனுஷ்டிக்க பொதுக்கட்டமைப்பு ஒன்று பற்றி பேசப்படுகின்றது.

எமது முக்கிய பிரச்னையே இதுதான். எப்போதும் எதைப் பற்றியும் கடைசி நேரத்தில்தான் யோசிக்கத் தொடங்குவோம். திலீபன் நம்மவர்களுக்கு நினைவுக்கு வருவது செப்ரெம்பரில் மட்டும்தான்.

பிறகு அதனை இலகுவாக மறந்துவிடுவார்கள், அடுத்த செப்ரெம்பர் வரை.

அறிஞர் அண்ணா காலமானபோது தி.மு.க. ஆட்சியில் இருந்தது. அவர் இறந்ததும் அவருக்கு நினைவிடம் அமைக்கப் பட்டது சென்னை மெரினா கடற்கரையில். இவ்வாறு அமைக் கப்படும் நினைவிடம் உடனே தமிழக பொதுப்பணித்துறையின் நிர்வாகத்திற்கு வந்துவிடும். இன்றுகூட அவரது நினைவு தினங்களில் தி.மு.கவும் அங்கே சென்று அஞ்சலி செலுத்தும், அ.தி.மு.கவும் அதே இடத்தில் அஞ்சலி செலுத்துவார்கள். அதற்காக இருவரும் அடித்துக்கொண்டதில்லை. பொதுப் பணித்துறை அதிகாரிகள் ஒவ்வொருகட்சிக்கும் நேரத்தை ஒதுக்கி கொடுப்பார்கள். அந்தந்த நேரத்தில் கட்சியினர் வந்து அஞ்சலி செலுத்துவார்கள்.

நங்கள்தான் இதனை கட்டினோம் என்று தி.மு.கவோ அல்லது, அண்ணாவின் பெயரில் கட்சி நடத்தும் எங்களுக்குத் தான் அண்ணா சொந்தம் என்று அ.தி.மு.கவோ உரிமை கொண்டாடியதில்லை.

இதுபோலத்தான், திலீபனும். அவர் தியாகத்தை மதிக்கின்ற எவரும் அவருக்கு அஞ்சலி செலுத்துவதை கேள்விக்கு உட் படுத்த எவருக்கும் உரிமையோ அருகதையோ கிடையாது.

எவர் வேண்டுமானாலும் திலீபனின் நினைவாக ஒரு மண்ட பத்திலோ அல்லது பொது மைதானத்திலோ தத்தமக்கு விருப்ப மானவாறு நினைவு நிகழ்வுகளை நடத்தலாம். அங்கே தமக்கு வேண்டிய அரசியலை பேசலாம்.

அதைவிட்டுவிட்டு இப்படித்தான் செய்யவேண்டும் என்றோ அல்லது அவர்தான் செய்யவேண்டும் என்றோ முட்டிமோது வதை இனியாவது நிறுத்திக்கொள்ளவேண்டும்.

மாகாணசபையில் தமிழர் ஆட்சி நடந்தபோது, நினைவிடங் களை நிர்வகிக்க என்று ஒரு தனியான அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்று மறவன்புலவு சச்சிதானந்தம் ஒரு தடவை பொதுவெளியில் தெரிவித்திருந்தமை ஞாபகம். அப்போதே அவர்கள் அதற்காக ஒரு நியதிச்சட்டத்தை அமைத்து இவற்றை நிறுவனமயப்படுத்தியிருக்கலாம்.

இதைப்பற்றி எழுதுவது என்றால் இன்னுமொரு பத்தி போதுமானதாக இருக்காது.

அடுத்த மாகாணசபை வரும்வரை பொறுத்திருப்போம்.!

- ஊர்க்குருவி

# ஜெனிவா குற்றச்சாட்டுக்களிலிருந்து இலங்கை அரசு தப்பிக்க முடியாது!

## கூறுகிறார் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்



நிந்தவூர், செப். 18

"ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் இடம்பெற்றுவரும் இதேவேளை முள்ளிவாய்க்கால் யுத்தக் குற்றங்களுடன், பொருளாதார நெருக்கடிக்கான மோசடி குற்றச் சாட்டும் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புபட்ட முன்னைய அரசும் ராஜபக்ஷக்களும் இலகுவில் தப்பிக்க முடியாது"

-இவ்வாறு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

அக்கரைப்பற்றில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன் னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச். எம்.அஷ்ரபின் 22 ஆவது நினைவேந்தல் நிகழ் வுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அக்கரைப்பற்று அய்னாஹ் கடற்கரை மண்டப மர்ஹூம் எம்.ஐ.எம்.முகைடீன் அரங்கில், "தோப்பாகிய தனிமரம்" எனும் தலைப்பில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்து பிரபல கவிஞரும், நடிகருமான வ.ஐ.ச. ஜெய பாலன் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா மர்ஹூம் அஷ்ரப் பற்றிய நினைவுப் பேருரை யையும் ஆற்றினார்.

அத்துடன் "முஸ்லிம் காங்கிரசும் சமகால அரசியலும்" எனும் தலைப்பில் முஸ்லிம் காங் கிரஸின் தவிசாளரும், முன்னாள் இணைந்த வட கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான "முழக் கம்" ஏ.எல்.அப்துல் மஜீத் சிறப்புரையும் ஆற்றி னார்.

தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரை யாற்றுகையில்-

இலங்கை மீதான ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்று வருகின்றன.

ஏற்கனவே கடந்த அரசுகாலத்திலான யுத்தக் குற்றச்சாட்டுக்களுடன் புதிதாக திருத்தம் மேற் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை நெருக் கடிக்குள்ளாக்கிய மோசடி தொடர்பிலும் குற் றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழு இலங்கை மீதான குற்றச்சாட்டில் புதிதாக குறித்த பொருளாதார பாதிப்பு எனும் குற்றச் சாட் டையும் இணைத்துள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

எனவே இலகுவில் இவற்றுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் தப்பிக்க முடியாதவாறு குற்ற விசார ணைக்கான முஸ்தீபுகள் இடம்பெறவுள்ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென இந்தியாவும் வலியுறுத்திவரும் நிலையில், இலங்கை அரசியலில் சூடுபிடிக்கத் தொடங்கி யுள்ளது.

இந்த நிலையில்தான் மொட்டுக்கட்சிகாரர் களின் பேச்சாளரான ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, அரசியலமைப்பு திருத்தம், சர்வசன வாக்கெடுப்பு எனபன பற்றிபேசத் தொடங்கியுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களையும், பல்கலைக் கழக மாணவர்களையும் சிறையிலடைத்து அச்ச மூட்டுவது போல், அவரால் எம்மை ஒரு போதும் அச்சமூட்ட முடியாது. எமது சுயாதீ னம், ஜனநாயக செயற்பாடுகள் வலுவானது.

இன்று போட்டி அரசியலின் வெளிப்பாடா கவும், விருப்பு வாக்கு அரசியலாலும் பல விபரீதங்கள்ளேற்றப்பட்டுள்ளன.

இந்த வகையில் மறைந்த தலைவர் அஷ்ரப் காட்டிய வழியில், அவருடைய சமூகம் சார்ந்த இலட்சியக்கனவுகளை நோக்கிய இலக்கை நோக்கி முஸ்லிம் காங்கிரஸின் பயணம் தொடர்கின்றது.

இந்தப் பயணம் கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியிருப்பதால், பல சந்தரப்பங்களில் தலைமை குருடனாகவும், செவிடனாகவும், ஏன் ஊமையாகவும் இருந்து கொண்டு கட்டம், கட்டமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான முயற்சிக்கின்றது.

கட்சியின் தீர்மானங்கள், கட்டுப்பாட்டை மீறி அரசுக்கு ஆதரவளித்த கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் கட்சிப் போராளி களுட்பட ஆதரவாளர்களும் சிலாகித்த வண்ணமுள்ளனர்.

கோட்டா ஆட்சி நிலைக்காது என்று கூறிவந் தோம். மீறி ஆதரவளித்த எம்மவர்கள் இன்று விழிபிதுங்கி நிற்கிறார்கள். அதிலும் ஒருவர் அமைச்சுப் பதவியையபெற்று, கட்சியை மீறி பீடாம்பரமாக உலாவருகின்றார். இவர் தொடர் பில் கட்சிவாளாதிருக்காது,

கேவலம், இவர் ஜனாதிபதியின் கடிதத்தைக் கொடுப்பதற்காக சவுதி இளவரசர் சல்மானைச் சந்திக்கச் சென்றவர், ஒரு துணை அமைச்சரி டமே கடிதத்தைக் கொடுத்துவிட்டு திரும்ப வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளார்.

இத்தகைய நிலையிலும் எம் தலைவர் அஷ்ரபை நினைவு கூர்வதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

ஊர்வாதம், பிரதேசவாதங்களுக்கு அப்பால் எம்மை வழிகாட்டிய மறைந்த தலைவர் அஷ்ரப், நிறைய முரண்பாடுகளுக்கு அப்பாலும் தமிழ் பேசும் இனங்களின் ஒற்றுமைக்கான முதன்மை சித்தாந்தத்தைக் கொண்டிருந்தார்.

துரோகங்கள், பிரச்னைகளை மறந்து கட்சியை வலுப்படுத்துவதற்கு முஸ்லிம் காங்கி ரஸ் தலைமைக்கு எவ்வித பிரச்சினையுமில்லை- என்றார்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ் வில் முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரும் உரை யாற்றினார்.

(அ-06)

# இந்தியாவின் ஆதரவு இல்லையெனில் ஜெனிவாவில் இலங்கை மண் கவ்வும்!

## பிரதீபா மஹாநாமஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 18

“ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையானது இந்தியாவின் ஆதரவை வெல்லும் பட்சத்தில் மேலும் 10 நாடுகள் இலங்கை பக்கம் சாயும்.” - என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், அரசியல் ஆய்வாளருமான பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

” இலங்கை தொடர்பான பிரேரணை ஒக்ரோபர் 07 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும். 47 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கும். இதில் 23 அல்லது 24 நாடுகளின் ஆதரவை திரட்டினால், பிரேரணையை இலங்கையால் தோற்கடிக்க கூடியதாக இருக்கும்.

இலங்கை வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஆதரவு மிக முக்கியம். இலங்கைக்கு சார்பாக இந்தியா வாக்களித்தால் மேற்குலகம், ஆபிரிக்கா, கரீபியன் தீவுகளில் உள்ள சுமார் 10 நாடுகள் இலங்கைக்கு நேசக்கரம் நீட்டும். இந்தியா நடுநிலை வகித்தால், பிரேரணை நிறைவேறும்.



இலங்கையானது உள்ளக பொறிமுறை யோசனையை முன்வைக்க வேண்டும். 10 ஆண்டுகால மனித உரிமை திட்டத்தை அமுலாக்க வேண்டும்.”-என்றார்.(அ)

# எரிபொருள்விலைகுறைந்தால் மின் கட்டணங்களில் மாற்றம்!

கொழும்பு, செப். 18



எதிர்காலத்தில் எரிபொருளின் விலை குறைக்க நடவடிக்கை மேற்கொண்டால் மின் கட்டணங்களில் மாற்றம் ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய உயர் மின் கட்டணத்தில் இருந்து நிவாரணம் கிடைக்கும் வேண்டும் என்றால் எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இந்த தகவலை வெளியிட்டார்.

அதிகரித்த மின்சாரக் கட்டணம் தொடர்பில் நாடு முழுவதிலும் இருந்து குற்றச்சாட்டுகள் மற்றும் குறைகள் கேட்கப்படுவது தொடர்பில் ஜனக ரத்நாயக்கவிடம் கேள்வி எழுப்பும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், மின்கட்டண உயர்வைக் குறை கூறாமல் முடிந்தவரை மின்கட்டணம் செலுத்த முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# மகாராணிக்கு அஞ்சலி செலுத்த லண்டனுக்கு புறப்பட்டார் ரணில்!

கொழும்பு, செப். 18

மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை இங்கிலாந்து பயணமானார்.

அதிகாலை 3.33 மணிக்கு டுபாய்க்கு புறப்பட்டு சென்ற அவர், அங்கிருந்து லண்டனுக்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதியுடன் 8 பேர் இந்த பயணத்தில் இணைந்துள்ளனர். மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் உடலம் தற் போது பிரிட்டனில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகளுக்கு ஒரு வேளை உணவை வழங்குவதிலும் சிக்கல்

கொழும்பு, செப். 18

மருந்து தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக சில வைத்தியசாலைகளில் நோயாளர்கள் மற்றும் சுகாதார உதவி பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவை வழங்குவது பெரிய சிக்கலாக மாறியுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களை விநியோகிப்போருக்கு சரியான முறையில் பணத்தை வழங்கவில்லை என்பதால், வைத்தியசாலைகளுக்கு உணவு, பழங்கள், சூப், கஞ்சி போன்றவற்றை சமைப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள், முட்டை, இறைச்சி, மீன் என்பன விநியோகிக்கப்படுவது குறைந்து வருவதாக சங்கத்தின் தலைவர் எஸ்.பி. மெதவத்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப் பெரிய வைத்தியசாலையான கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் இந்த சிக்கல் காணப்படுகிறது. நோய்களில் இருந்து குணமாக நோயாளிகளுக்கு மருந்தை போன்று போஷாக்கான உணவையும் வழங்கவேண்டும்.

இந்த நிலைமை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி, விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை பணத்தை செலுத்தி துரிதமாக நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மெதவத்த மேலும் கூறினார். (அ)

# வாகரை கதிரவெளி பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, செப். 18

வாகரை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிரவெளி பால்சேனை பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய வாகரை பொலிஸாரின் உதவியுடன் குறித்த பிரதேசத்தில் ஆயுதங்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கை அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 200 ஜி.பி.எம்.ஜி. ரவைக் கோர்வை, 750 ஜி.பி.எம்.ஜி. தோட்டாக்கள், 50 கலிபர் ரவை, பொராக்குண்டு, 07 ஏ.கே ரவைக்கூடுகள், கைக்குண்டு, கண்ணி வெடி, எறிகணை போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் திருமலையில்

திருமலை, செப். 18

காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந் தோட்டை வரை பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து இடும் வேலைத்திட்டமானது நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து பயங்கரவாத தடுப்புச்சட்டத்தினை நீக்கக் கோரி நாடு தழுவிய ஊர்தி வழி கையெழுத்துப் போராட்டம் நேற்று திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது. (அ)



# வட்டி வீதம் அதிகரிப்பினால் 2023இல் பொருளாதார மந்தம்

## உலக வங்கி தெரிவிப்பு

கொழும்பு,செப். 18

உலகெங்கும் உள்ள மத்திய வங்கிகளால் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பது 2023இல் உலகில் பொருளாதார மந்தநிலை ஒன்றைத் தூண்டும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.

அதிகரித்து வரும் விலையேற்றத்தை சமாளிக்க கடந்த பத்து தசாப்தங்களில் காணாத வகையில் ஒத்திசைவு கொண்டதாக மத்திய வங்கிகள் வட்டி வீதத்தை அதிகரித்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு வேகத்தை குறைக்கும் முயற்சியாக கடன் பெறுவதை கடினம் ஆக்குவதாகவே இந்த அதிகரிப்பு உள்ளது. எனினும் இதனால் கடன் பெறுவது அதிக செலவு மிக்கதாகி பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்கிறது.

அமெரிக்க மத்திய ரிசேவ் வங்கி மற்றும் இங்கிலாந்து வங்கி ஆகியன அடுத்த வாரம் தமது முக்கிய வட்டி வீதத்தை அதிகரிக்கும் எதிர்பார்ப்புடன் நிதிக் கொள்கை சந்திப்புகளை நடத்தவிருக்கும் நிலையிலேயே உலக வங்கியின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

1970 தொடக்கம் பொருளாதார மந்தநிலை மீட்சிக்குப் பின்னரான உலகப் பொருளாதாரம் செங்குத்தாக மந்தநிலையை நோக்கிச் செல்வதாக உலக வங்கி கடந்த வியாழக்கிழமை கூறி இருந்தது.

உலகின் மூன்று மிகப்பெரிய பொருளாதாரமான அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய பிராந்திய பொருளாதாரம் வேகமாக மெதுவ டைந்து வருவது ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது என்று உலக வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

‘இந்த சூழ்நிலையில், அடுத்த ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் ஒரு மிதமான தாக்கம் ஏற்பட்டாலும் அது மந்தநிலைக்கு வழிவகுக்கும்’ என்று அதில் கூறப்பட்டுள்ளது.

மத்திய வங்கிகள் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளும்படியும் தேவையான கட்டுப்பாடுகளின் வேகத்தை குறைப்பதற்கு கொள்கை முடிவுகளை தெளிவாக வெளிப்படுத்தும்படியும் உலக வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் பணவீக்கத்தால் பொருட்கள் விலை கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னரான கேள்வி அதிகரிப்பு மற்றும் உக்ரைன் போரினால் ஏற்பட்ட எரிபொருள், வலுசக்தி மற்றும் உணவு விலைகளின் அதிகரிப்பு இந்த நிலைக்கு காரணமாகியுள்ளது.

இதனை சமாளிக்கும் வகையில் மத்திய வங்கிகளின் கொள்கை வகுப்பாளர்கள் குடும்பங்கள் மற்றும் வர்த்தகங்களில் இருந்து கேள்வியை குறைப்பதற்கு வட்டி வீதத்தை அதிகரிக்க தீர்மானித்தனர்.

எவ்வாறாயினும் இவ்வாறு அதிக அளவில் வட்டி வீதம் உயர்த்தப்படுவது பொருளாதார மந்தநிலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தலை உருவாக்குவதோடு பொருளாதாரம் மெதுவடைவதற்கும் காரணமாகிறது. (அ)

# இலங்கையில் 100 வீதம் ஜனநாயகம் கிடையாது!

## சொல்கிறார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, செப். 18

"இலங்கையில் இன்று நூறு சதவீதம் ஜனநாயகம் இல்லை. அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்."

-இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சிறந்த அறிவுள்ள இளைஞர்கள் காணப்படுகின்ற போதிலும், அவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. ஆனால், மறுபுறம் வயதானவர்கள் தொழிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

60 வயதில் அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற வேண்டுமெனில், அந்த வயதைக் கடந்த அரசியல்வாதிகள் ஏன் இன்னும் ஓய்வுபெறவில்லை என்பது தற்போதைய பிரபல கோஷமாகவுள்ளது.



இளைஞர்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கப் பெறாமலுள்ளமைக்கான காரணம் என்ன? அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக ஜனநாயகம் இன்மையே இதற்கான பிரதான காரணியாகும்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வரம்பற்ற அதிகாரம் காணப்படுகின்றது. அரசியல் கட்சிகளின் கிளை அலுவலகங்களிலிருந்து இளைஞர்கள் அரசியலுக்குள் உள்வாங்கப்படுவதில்லை.

நேர்முகத்தேர்வுகளின் போது பெண்களையும் உள்ளடக்குமாறு கட்சி ஒன்றின் தலைவரிடம் நான் கோரிக்கை விடுத்தேன். அதற்குப் பதிலளித்த குறித்த நபர், 'ஒருவர் அல்ல. 5 பெண்களைக் கூட நேர்முகத்தேர்வை நடத்துவதற்கு நியமிக்க முடியும். ஆனால், இறுதித் தெரிவு எம் கைகளிலேயே உள்ளது.

நகங்களிலிருந்து தலைமையிர் வரை நாம் ஜனநாயகமுடையவர்களாகக் காணப்பட வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் ஜனநாயகம் வலுப் படுத்தப் பட்டால் கட்சி ஜன நாயகமுடையதாகக் காணப் படும்.

கட்சிகள் ஜனநாயகமுடையவையாக மாற்றமடையும் போது, நாட்டிலும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப் படும். வாக்களிப்பது உங்களது உரிமை, எனவே வந்து வாக்களியுங்கள் என்று பிரசாரம் செய்பவர்கள், மறுபுறும் ஏதேனும் செய்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்றும் எச்சரிக்கின்றனர்.

நாட்டில் நூற்றுக்கு நூறு சதவீதம் ஜனநாயகம் இல்லை. இன்று பிரபுக்களின் வாதமே காணப்படுகின்றது. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாம் என்ற கோஷத்துக்குப் பகிரங்கமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியவன் நான்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளிட்ட இளைஞர் - யுவதிகளுக்கு ஆதரவாகவே நான் செயற்பட்டேன் என்பதை பலரும் அறிவார்கள். ஆனால், வேட்பு மனுக்களை பொறுப்பேற்றவன் நான் எனக் கூறி, எனது வீட்டையும் தாக்குவதற்கும் சிலர் வருகை தந்தனர் - என்றார். (அ)



# வன்னியசிங்கத்தின் நினைவு யாழில்

யாழ்ப்பாணம், செப். 18

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த கு.வன்னியசிங்கத்தின் நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணம், நீர்வேலியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டது.

தமிழரசுக் கட்சியை உருவாக்க பங்களித்த முக்கியஸ்தரில் ஒருவராக விளங்கிய மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் கு.வன்னியசிங்கத்தின் 53 ஆவது நினைவு தினம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்டோரால் நினைவு கூரப்பட்டது.

குறித்த நினைவு தின நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# குடும்ப வன்முறையா? அழையுங்கள் 1938 இற்கு

கொழும்பு, செப். 18

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கான உதவிச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

மேலும் மாவட்ட அளவில் பெண்கள் தடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடும்ப வன்முறை தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக 1938 என்ற தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது 24 மணி நேரமும் செயற்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# விரைவில் பட்ஜெட் அலுவலகம்

கொழும்பு, செப். 18

வருவாய்கள் மற்றும் செலவீனங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் குறித்த சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்டு நிதிச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகத் தனியான வரவு - செலவுத்திட்ட அலுவலகமொன்றை பாராளுமன்றத்தில் அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார். (அ)

# நிதிப் பற்றாக்குறை காரணமாக அரச நிறுவனங்களுக்கு நெருக்கடி

கொழும்பு, செப். 18

நிதிப் பற்றாக்குறை காரணமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமை காரணமாக அந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதும் பாரிய பிரச்னையாக மாறியுள்ளதாக பல முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில நிறுவனங்களில் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான எழுதுபொருள்களை ,காகிதாதிகளை பெறுவது, அத்தியாவசியப் பணியாளர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவது போன்றவை பாரிய பிரச்னையாக மாறியுள்ளது.

அமைச்சுக்களில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது மாத்திரமன்றி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பராமரிப்பதிலும் கூட கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலைகள், வீடமைப்பு போன்ற அமைச்சுக்களில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை இருபதாயிரம் கோடிக்கு மேல் உள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல அரசு நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதும் கடுமையான நெருக்கடியில் உள்ளது.

இதேவேளை, இரண்டு அரசு வங்கிகளில் இருந்தும் நிதி விடுவிக்கப்படாததால், நெல் சந்தைப்படுத்தல் சபையும் நெல் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது. (அ)

# அனைத்துப் பிரச்னைகளுக்கும் பொதுத்தேர்தல் ஊடாகவே தீர்வு

## சுட்டிக்காட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

அம்பாறை, செப். 18

"நாடு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் பொதுத்தேர்தல் ஊடாகவே தீர்வைக்காண முடியும். ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் ஆணையுடன் ஆட்சியமைத்தால் அனைத்துப் பிரச்னைகளுக்கும் விரைந்து தீர்வு கண்டே தீரும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் அமுல்படுத்தப்படும் "மூச்சு" வேலைத்திட்டத்தின் 52 ஆவது கட்டமாக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

74 ஆண்டுகால அரசியல் குறித்து மக்கள் மத்தியில் நிலவும் விரக்தி நியாயமானதுதான். இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்தவாறு அரசை மட்டும் விமர்சிக்காமல், மக்களை வாழவைக்கவும், எதிர்காலச் சந்ததியினரின் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தவும் நடவடிக்கைகளை முடிந்த வரை எடுத்து வருகின்றது.

நாட்டின் குடிமக்களை வாழ வைப்பது எம் மீது சுமத்தப்பட்ட சமூகக் கடமை.

நாடு நெருக்கடியான சூழலை எதிர்நோக்கி வரும் இந்நேரத்தில் அமைச்சுக்களைப் பெற்று மக்களுக்கு மேலும் சுமைகளை அதிகரிப்பதை விடுத்து, எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டு மக்களுக்கு வழங்க முடியுமான உயர்ந்தபட்ச உதவிகளை வழங்குகின்றோம்.

நாட்டின் வைத்தியசாலைக் கட்டமைப்பு நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில், "மூச்சு" வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களின் உயிரைக் காக்க எதிர்க்கட்சியாக நானும், சக பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் எப்போதும் முன் நிற்கின்றோம்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது நாட்டைக் கட்டியெழுப்ப உதவுமாறு கேட்ட சந்தர்ப்பத்தில் பதவிகளை எடுக்காமல் சுகாதாரம் ,கல்வித்துறைகளை கட்டியெழுப்ப உதவுவதாக நன் உறுதியளித்தேன்.

சுகாதாரத் துறைக்கு மூச்சுத் திட்டமும், கல்வித் துறைக்கு பிரபஞ்சம் தகவல் தொழில் நுட்பத் திட்டமும் தொடங்கப்பட்டு, இதனூடாக எதிர்க்கட்சி என்ற ரீதியிலும் எமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்றோம்.

அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைச் சுகாதாரத்துறைக்குப் பயன்படுத்துவதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக, குறைந்த செலவில் அதிக வேலைகளைச் செய்து தமது சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதையே இந்நேரத்தில் மேற்கொண்டு வருகின்றது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
18.09.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# எதிர்காலத்திற்கான அரசியல்?

தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கான அரசியல் கட்டமைப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டியதும், சிந்திப்பதை நடைமுறைப்படுத்த வேண்டியதும், தமிழ் தேசிய அரசியல் பரப்பிலுள்ளவர்களின் முதன்மையான பணியாகும். இது தொடர்பில் எமது முன்னைய ஆசிரியர் தலையங்கங்களிலும் எடுத்துரைத்திருக்கின்றோம். ஆனாலும் நிலைமை சீரடையவில்லை – மாறாக மேலும் மோசமடைவதற்கான அறிகுறிகளே தெரிகின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகளாக இன்று தங்களை அடையாளப்படுத்தியிருப்பவர்கள் அனைவருமே ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்புக்களை கொண்டிருப்பவர்கள் அல்லர். ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழரசுக் கட்சி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாவட்ட கட்டமைப்புக்களை கொண்டிருக்கின்றது. ஆனால் அவைகளும் பலமான நிலையில் இல்லை. இந்த பின்புலத்தில்தான் கூட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் சிந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் அவ்வாறான கூட்டு வேலைத்திட்டங்களும் இதுவரையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையின் கீழ் முன்னெடுக்கப்படவில்லை.

எதிர்கால அரசியல் நிலைமைகள் எவ்வாறும் மாற்றமடையலாம். அது நமது கணிப்பிற்கு அப்பாற்றப்பட்டது. நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருப்பதற்கு அமைவாக, ஒரு கூட்டு முன்னணிக்கான, ஆனால் அது முறையான கட்சிக்கான பதிவை கொண்டதாக உருவாக்கப்படவேண்டும். தற்போதுள்ள நிலையில் வெளியிலிருப்பவர்களையும் உள்வாங்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும். இது தொடர்பில் அதிகம் கால தாமதம் கூடாது. இது ஒரு வழிமுறை. அடுத்தது, ஒரு வேளை அது சரிவராவிட்டால், நீண்டகால நோக்கில் சமஸ்டிக் கோரிக்கையுடனும், இடைக்கால அடிப்படையில் மாகாண சபையை உச்சளவில் பயன்படுத்துவது, பலப்படுத்துவது என்னுமடிப்படையில் இணங்கிச் செல்லக்கூடிய அனைத்து தரப்புக்களையும் ஒன்றிணைக்கும் பொறிமுறையொன்று தொடர்பில் சிந்திக்க வேண்டும். வெறும் தேர்தல் அரசியல் கணக்குப் போடுவதன் மூலம் எதிர்கால அரசியலை கையாள முடியாது.

இன்றைய நிலையில் இலங்கைத் தீவில் மிகவும் பலவீனமான அரசியல் கட்டமைப்பை கொண்டிருப்பவர்கள் தமிழ் மக்கள் மட்டும்தான். இதற்கு அனைவருமே பொறுப்பாளிகளாவர். ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பு ஒரு பலவீனமான அமைப்பாகவே இருந்து வருகின்றது மற்றும் உள் முரண்பாடுகளின் கூடாரமாகவே இருந்து வருகின்றது. சின்னம் ஒரு கட்சியிடமும், ஏனையவர்கள் தேர்தல் காலத்தில் ஆசனங்களுக்காக தமிழரசு கட்சியிடம் சண்டை போடும் நிலையிலேயே கடந்த ஒரு தசாப்த கால அரசியல் முன்னெடுப்புக்கள் நகர்ந்திருக்கின்றன. சின்னம் தங்களுடையது என்னுமடிப்படையிலேயே தமிழரசுக் கட்சி அனைத்து விடயங்களிலும் மேலாதிக்கம் செலுத்தியது. இதுவே பல்வேறு குழப்பங்களுக்கு வழிவகுத்தது. இறுதியில் தனிநபர்கள் தங்களின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நிலைமை உருவாகியது.

கூட்டு முடிவுகளின் அடிப்படையில் அரசியலை முன்னெடுக்கும் பொறிமுறையொன்றே எதிர்காலத்திற்கு தேவையானது. ஆனால் தற்போதுள்ள கூட்டமைப்பிலும் அதே வேளை, கூட்டமைப்பை தவறென்று கூறி மாற்று அரசியலை முன்னெடுக்க முற்பட்டவர்கள் எவரிடமும் அவ்வாறான அரசியல் கட்டமைப்பொன்று இல்லை. தமிழ் தேசிய அரசியலின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் புத்திஜீவிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் அனைவரும் இது தொடர்பில் சிந்திக்க முன்வர வேண்டும்.

அனைவரும் ஒன்றுபட்டு, எதிர்கால அரசியலுக்கான ஒரு பொருத்தமான, உறுதியான அத்துடன், தனிநபர்கள் தங்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப கையாள முடியாத, அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முன்வர வேண்டும். இல்லாவிட்டால், எதிர்காலம் கேள்விக்குள்ளாவது நிச்சயம். வெறும் தேர்தல் காலத்தில், வாக்குகளை சேகரிப்பதற்காக ஆட்களை தேடும் அரசியலாகவே – தமிழ் தேசிய அரசியல் சுருங்கிப் போகும். தேர்தலில் எவர் அதிகம் முதலீடு செய்வாரோ அவர்களே தலைவர்களாகும் அவலம் நிகழும்.

# அமைச்சுப் பதவிகளை எடுத்தோரை கட்சியிலிருந்து நீக்குகிறார் மைத்திரி

*கொழும்பு, செப். 18*

*ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தபடி அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்ய கட்சித் தலைமை தயாராகி வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*முதற்கட்டமாக அவர்களை கட்சியின் பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு குற்றப் பத்திரத்தை சமர்ப்பித்து பின்னர் கட்சியின் உறுப்புரிமையை இடைநிறுத்தத் திட்டமிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடலொன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம் பெற்றதுடன், இவ்விடயம் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டதாக தெரிய வருகிறது.*

*அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாகவும், இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட லசந்த அழகியவண்ண பொருளாளராகவும் செயற்படுகின்றனர். கட்சி உறுப்பினர்களான சாமர சம்பத் தசநாயக்க மற்றும் ஜகத் புஷ்பகுமார ஆகியோர் பிரதிச் செயலாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.*

*இதன்படி, இவர்கள் அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*(அ)*

# மன்னார் நொச்சிக்குளம் இரட்டை படுகொலை; கைதான சந்தேக நபர்கள் தொடர்ந்து மறியலில்

*மன்னார், செப். 18*

*மன்னார் நொச்சிக்குளம் இரட்டை படுகொலை தொடர்பாக சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்ட 20 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.*

*குறித்த 20 சந்தேக நபர்களும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது குறித்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*மேலும் சம்பவ இடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுப் பொருட்களான இரத்த மாதிரி, இரண்டு கோடரிகளை பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்ப பொலிஸாரினால் மன்றில் அனுமதி கோரியபோது மன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.*

*இதன்போது பொலிஸ் அதிகாரி ஒருவரை நியமித்து, குறித்த சான்று பொருட்களையும் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்ப நீதவான் உத்தரவு பிறப்பித் தார்.*

*கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி மன்னார் நொச்சிக்குளத்தில் இடம்பெற்ற சம்பவத்தில், உயிலங்குளம் பகுதியை சேர்ந்த சகோதரர்கள் இருவர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.*

*இந்த சம்பவம் தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.*

*இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் உயிலங்குளம், மற்றும் தலைமன்னார் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மன்னார் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

# வாஸ் குணவர்தனவின் மனைவி உட்பட இருவருக்கு பிடியாணை

## உடனடியாக கைது செய்யுமாறு உத்தரவு

*கொழும்பு, செப். 18*

*முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவியான சியாமலி குணவர்தன மற்றும் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் இந்திக புஷ்பகுமார ஆகியோருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*அவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அறிவித்துள்ளார்.*


*மாலபே சைட்டம் நிறுவனத்தின் மாணவரான நிபுண ராமநாயக்கவைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று, குரூரமாகத் தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் ஆறாவது பிரதிவாதியாக சியாமலி குணவர்தன பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.*

*இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வாஸ் குணவர்தன மற்றும் அவரின் மகனான ரவிந்து குணவர்தன உள்ளிட்ட மேலும் 6 பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.*

*எனினும், இரண்டு பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகாமையால், வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிவான், இரண்டு பிரதிவாதிகளுக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




# இது ஒரு துயரப் பகிர்வு

பகிர்வு -47

கணபதி சர்வானந்தா

புகழ்பெற்ற இலக்கியத் திறனாய்வாளரும் ஊடகத்துறையில் பன்முக ஆளுமை மிக்கவருமான கே.எஸ். சிவகுமாரன் கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு காலமானார்.



இவர் இலக்கியவாதி, விமர்சகர், எழுத்தாளர், திறனாய்வாளர் எனப் பன்முகம் கொண்டவர். இலங்கையின் மூத்த அறிவிப்பாளர்களுள் ஒருவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சியும் தெளிவும் பெற்றிருந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாக எழுதும் ஆற்றல்மிக்கவர். பத்தி எழுத்து எனும் பதத்திற்கு முதன் முதலில் உயிர் கொடுத்தவர். தரமறிந்து பலரது படைப்புகளையும் அவர்தம் இலக்கியப் பணிகளையும் தமது பத்திகளில் பதிவிட்டவர் கே.எஸ்.சிவகுமாரன்..

கைலாயர் செல்லநைனார் சிவகுமாரன் என்பதன் சுருக்கமே கே. எஸ். சிவகுமாரன். அவர் 1936 ஒக்டோபர் 01 இல் மட்டக்களப்பில் புளியந்தீவு என்ற இடத்தில் உள்ள சிங்களவாடி என்ற கிராமத்தில் பிறந்தவர். 2022 செப்ரெம்பர் 15வரை இலக்கியத்தோடு வாழ்ந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு ஆங்கிலப்பட்டதாரி ஆவர். பெற்றோர்கள் திருகோணமலையையும், மட்டக்களப்பையும் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

இவர் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் மாணாக்கர். பாலுமகேந்திரா மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் சச்சிதானந்தன் என்பவருடன் இணைந்து வெளியிட்ட "தேனருவி" என்ற கலை இலக்கிய இதழில் பல ஆக்கங்களை எழுதியிருக்கும் சிவகுமாரனின் ஒரு நூலுக்கு பாலுமகேந்திரா முன்னுரை எழுதியுள்ளார். கே.எஸ். சிவகுமாரனின் அசையும் படிமங்கள் என்ற சினிமாத்துறை சார்ந்த நூலின் முகப்பு அட்டையை அந்தப் பால்யகாலத் தோழர்களே அலங்கரிக்கின்றனர். கே.எஸ்.சிவகுமாரன் இறைபதமடைவதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எழுத்தாளர் முருகபூபதி அவர்கள் கே.எஸ்.சிவகுமாரன் பற்றி எழுதியதில் இருந்து சில குறிப்புகளை உங்களுடன் பகிர விரும்புகிறேன்.

"ஈழத்து இலக்கியத்திற்கும் மொழிபெயர்ப்புத்துறைக்கும் கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அளப்பரிய சேவையை அர்ப்பணிப்போடு மேற்கொண்டுவருபவர். அவர் எங்களால் கொண்டாடப்படும் ஒரு இலக்கிய நண்பர் - இலக்கியத்திறனாய்வாளர். இதுவரையில் நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களையும் ஆங்கிலத்தில் சில நூல்களையும் வரவாக்கிவிட்டுத் தொடர்ந்தும் அயராமல் ஆங்கில, தமிழ் இதழ்களில் எழுதிக்கொண்டிருப்பவர். முகநூல் அறிமுகமானதன் பின் அதிலும் எழுதுகிறார். அவர் பல சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். அத்துடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் கவிதைகளையும் எழுதியுள்ளார். இருமை மற்றும் சிவகுமாரன் கதைகள் ஆகிய இரண்டு சிறுகதைத்தொகுப்புகள் இதுவரையில் வெளியாகியிருக்கின்றன. பெரும்பாலான இவரது கதைகள் உளவியல் சார்ந்திருக்கும். எவரையும் தமது எழுத்துக்களினால் காயப்படுத்தத்தெரியாதவர்.

இலங்கை வானொலி, த ஐலண்ட், வீரகேசரி முதலான ஊடகங்களில் பணியாற்றியவர். இவரது பத்தி எழுத்துக்களை டெயிலிநியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பார்க்கலாம். இலங்கை வங்கி உட்படப் பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியிருக்கிறார். இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தகசேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும்

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப் பாளராகவும் செய்திப் பிரிவில் துணை ஆசிரியராகவும் சேவையாற்றிய கே.எஸ். சிவகுமாரன் இலங்கையில் அமெரிக்கத் தூதரகத் தகவல் பிரிவி லும் சிறிதுகாலம் பணியாற்றியிருக் கிறார். நவமணி இதழின் ஸ்தாபக ஆசி ரியரும் இவரே.

கொழும்பில் மூன்று சர்வதேசப் பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு. இலங்கைத் திரைப்படத் தணிக்கை அதிகாரியாகவும் கடமையாற்றியவர். சிறுகதை, திறனாய்வு, பத்தி எழுத்துக்களில் மாத்திரம் கவனம்செலுத்தியவர் அல்ல. தரமான சினிமா பற்றிய பிரக்ஞையுடனும் இயங்குபவர்.

அசையும் படிமங்கள், சினமா ஒரு உலகவலம் ஆகிய இவரது நூல்கள் சினமா பற்றியவை. இந்தியாவில் நடந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களில் அவர் பங்குபற்றியிருக்கிறார். - என அவர் எழுதிய இக் கட்டுரை வெளிவந்த சில நாட்களில் கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் இறைபதமடைந்து விட்டார் என்ற செய்தி இலக்கிய உலகைக் கவலையிலாழ்த்தியுள்ளதெனலாம்.

# இந்தவார ராசிபலன் 18.09.2022 - 24.09.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00** **ராகு காலம் : 04.30 - 06.00** **திதி : சூன்ய**

**செப்ரெம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - புரட்டாசி 01**




வரவுகள் அதிகரிக்கும். செயல்களில் லாபம் உண்டாகும். எண்ணங்கள் எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். முயற்சியில் அனுகூலம் காண்பீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் பலிதமாகும். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். சங்கடங்கள் தோன்றும். புதிய நட்புகளிடம் அதிகமான நெருக்கம் வேண்டாம்.




எண்ணங்கள் நிறைவேறும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும். எதிர்காலம் குறித்த செயல்களில் ஈடுபடுவீர்கள். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். வெளியூர் பயணம் லாபம் தரும். செலவுக்கேற்ற வரவுகள் வந்து சேரும். புதிய முயற்சிகள் லாபமாகும். விலகிச்சென்ற உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவார்கள். திட்டமிட்டு செயல்பட்டு அனைத்திலும் வெற்றி காண்பீர்கள்.




அலைச்சல் உண்டாகும். மனம் மகிழும்படியான நிலை ஏற்படும். செயலில் வேகம் தோன்றும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். செலவுகளில் கவனமும் பணத்தில் பாதுகாப்பும் தேவை. நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். திட்டமிட்ட செயல்கள் நிறைவேறும். அந்நிய மனிதர்களால் உதவிகள் கிடைக்கும்.




உங்கள் செல்வாக்கு உயரும். தொழில், உத்தியோகத்தில் ஆதாயமான நிலை உருவாகும். பண வரவு அதிகரிக்கும். திடீர் செலவுகள் தோன்றும். வெளியூர் பயணம் ஏற்படும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை கொண்டு செயல் படுவீர்கள். வீட்டில் சுபச்செலவுகள் உண்டாகும். சிந்தனை மேலோங்கும். வேலை தேடி வந்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். நன்மைகள் அதிகரிக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும். அரசு வழியில் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும்.முயற்சியில் இருந்த தடைகள் விலகி ஆதாயமான நிலை உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். உங்கள் சங்கடங்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செல்வாக்கு உயரும்.




நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் வெற்றியாகும். வியாபாரம், தொழிலில் திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஒரு சிலருக்கு புதிய வேலை அமையும். வருமானம் அதிகரிக்கும்.முயற்சிகள் வெற்றியாகும்.பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.உங்கள் அனுகுமுறையால் எதிர்பார்த்தவற்றில் ஆதாய நிலையை அடைவீர்கள். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும்.




முயற்சிகளில் தடைகள் உண்டாகும். எதிர்பாராத நெருக்கடிகளும் மனதிற்கு சங்கடமான நிகழ்வுகளும் நடக்கலாம். முயற்சிகளில் ஆதாயம் அடைவீர்கள். செயல்களில் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். ஆதாயம் உண்டாகும். வரவுகள் இழுபறியாகும். நிதானத்துடன் யோசித்து செயல்படுவதும் அமைதி காப்பதும் நன்மையாகும். செயல்களில் நிதானம் தேவை.




முயற்சிகள் அனுகூலம் ஆகும். வீட்டில் சுபச்செலவுகள் ஏற்படும். வீடு மனை வாங்குவீர்கள் புதிய முயற்சிகளைத் தவிர்ப்பதுடன் கவனமாக செயல்படவும். நன்மைகள் தோன்றும்.வேலை வாய்ப்புக்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். செயல்களில் தடைகளும், தோல்வியும் உண்டாகலாம் என்பதால் நிதானித்து செயல்படுங்கள். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.




உங்களுக்கு நன்மையான வாரம் இது. செயல்களில் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களில் ஒரு சிலருக்கு இடமாற்றம். ஏற்படும். தொழிலில் அனுகுமுறைகள் லாபத்தை ஏற்படுத்தும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும்.பகைவர்கள் விலகிச் செல்வார்கள். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயம் தரும். சிறிய தடைகள் தோன்றும்.




செயல்களில் கவனம் தேவை. முயற்சிகள் இழுபறியாகவே இருக்கும். உங்கள் நிலையில் மாறுதல் தோன்றும். நினைத்ததை சாதிப்பீர்கள். விரும்பியதை அடைவீர்கள். எதிரிகளின் தொல்லைகள் விலகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேற்றும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும்.விலகிச் சென்ற உறவுகள் உங்களைத் தேடி வருவார்கள்.




முயற்சிகளில் கவனம் தேவை. குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.உடல் நிலையில் பாதிப்பை ஏற்படும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடந்தேறும். புதிய முயற்சிகளில் கவனம் செல்லும்.உடல் நலனில் கவனம் கொள்ளுங்கள். அடுத்தவரை நம்பி எந்தவொரு செயலிலும் ஈடுபடாதீர்கள்.




எண்ணங்கள் எளிதாக நிறைவேறும். பொறுப்புகள் அதிகரிக்கும் வேலை பளு கூடும். குடும்பத்திற்காக செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியே சில சங்கடங்கள் உண்டாகும். பணம் பொருள்களைக் கையாளுவதில் கவனம் தேவை.வார்த்தைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்துங்கள். இல்லையெனில் அதனால் சங்கடங்கள் உண்டாகலாம். கணவன் மனைவிக்குள் சில பிரச்னைகள் தோன்றும். நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள்.

# ‘பட்டாம்பூச்சியைக் கொல்ல, வண்டிச் சக்கரமா?’

இந்த வாரம் அரசியலிலிருந்து விலகியிருக்க நினைத்தேன். அல்லது, உங்களுடனான எனது இந்த ஞாயிறு உரையாடலிலிருந்து அரசியலைப் புறந்தள்ளி, உங்கள் டிபன் காபியை மகிழ்ச்சியாக அனுபவிக்க வைக்க நினைத்தேன். மக்கள், பொறுப் பான பொது நடத்தை, நம் முன்னோர் காலத்து நாட்டுப்பற்று இவை குறித்துப் பேச விரும்பினேன்.

உண்மையைச் சொல்லப்போனால், ஏன் நாம் அரசியலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் தருகிறோம்? காலை படிக்கும் செய்தித்தாளிலிருந்து தொலைக் காட்சி வரை அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் அரசியல் மயமாகவே இருக்கிறது. அருகிலுள்ள ஓர் ஆரம்பப் பள்ளியில் உங்கள் குழந்தையைச் சேர்க்க வேண்டுமானால் ஓர் உள்ளூர் அரசியல் தலைவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பரிந்துரைக் கடிதம் தேவைப்படுகிறது. அரசியலு டனும் அரசியல்வாதிகளுடனும் அமைப்புகளுடனு மான நமது தொப்புள்கொடி உறவு, பிரசவ மருத்துவ மனையில் தொடங்கிக் கல்லறை தாண்டியும் தொடர்கிறது. மரணத்துக்குப் பிறகும்கூட, நமது குழந்தைகள், இறப்புச் சான்றிதழ், வாரிசுதாரர் சான்றிதழ், வரிச் சான்றிதழ், வங்கிச் செயல்முறைகள் எனப்

பல காரணங்களுக்காக அரசியல்வாதிகளை நாடவேண்டிய அவல நிலை நீடிக்கிறது. இதுதான் என் நாட்டில் உள்ள நிலைமை. உங்கள் நாட்டிலும் இதுவே நிலை என்று நினைக்கிறேன். அநேகமாக, அனைத்து வளரும் மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளில் இதுபோன்றுதான் நடக்கிறது.

கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்தி ரேலியா, ஐரோப்பாபோன்ற பல நாடுகளில் வாழும் உங்கள் சகோதர சகோதரிகளைக் கேட்டுப்பாருங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அரசியல்வாதி களுடனான அவர்களது தொடர்புகள் எந்த அளவுக் குக் கண்ணியமாக, ஆரோக்கியமாக, சமுதாயம் சார்ந்ததாக இருக்கிறதென்று அவர்கள் கூறுவார்கள். அவர்களில் அநேகமானவர்கள், இங்கு உங்கள் நிலை குறித்துப் பரிகாசம் கூடச் செய்வார்கள். அவர்களும் (அல்லது அவர்கள் முன்னோர்களும்) இங்கிருந்துதான் சென்றிருக்கிறார்கள் என்பதை மறந்து விடுவார்கள்.

ஏதோ ஒரு காரணத்துக்காக, ஒரு சிபாரிசுக் கடிதத்துக்காக ஓர் அரசியல்வாதியின் வீட்டு வாசலில் தவமிருந்த நம் சோமு (கற்பனைப் பெயர்) திடீரென்று வெளிநாடு சென்றவுடன் ‘நாகரிக’ குடிமகனாக மாறி விடுவது எப்படி? அவனது மூளையோ ஆன்மாவோ வேறாகிவிட்டதா? தனக்கும் தனது குடும்பத்துக்கும் கிடைக்கவேண்டியது யாரையும் கெஞ்சாமல், யாருக்கும் லஞ்சம் கொடுக்காமல் யாருடைய சிபாரிசும் இல்லாமல் கிடைக்கும் என்று அவனுக்குத் தெரிகிறது. மிஸ்டர் சோமநாதனுக்கு இப்போது, தான் கடைபிடிக்கவேண்டிய சட்ட விதிகள் நன்றாகத் தெரிகின்றன. அரசுக்கும் சமூகத்துக்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும்,

தனது பொறுப்புகள் குறித்தும் தெளிவாகத் தெரிகின்றன. நிர்வாகம் பொறுப்புடனும் வெளிப் படையாகவும் இருக்க வேண்டுமானால், தானும் பொறுப்புடனும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் என்றும் புரிகிறது.

ஆனால், தனது சொந்த நாட்டில் இருந்தபோது, சோமு ஏன் இப்படிப் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது. தனது வாழ்க்கை வளம்பெற விரும்பி வெளிநாடு சென்றவிட்ட சோமுவின் சகோதரார்கள் இங்கிருந் தாலும், அந்த நடத்தையை ஏன் பின்பற்ற விரும்புவ தில்லை? டொலர்களிலும் ஸ்ரேர்ளிங் பவுண்களிலும் அவன் ஈட்டும் வருவாயை மட்டும் தங்கள் ரூபாய் வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பரிதாபப்பட் டுக் கொள்கிறார்களே, அது ஏன்? சோமுவும் சகாக்க ளும் கூறும் எதார்த்தம் இதுவாகத் தானிருக்கும், ‘நான் மட்டும் தானா? எல்லோரும் இப்படித் தானே?’

தனது சொந்த நாட்டிலும் இதுபோன்ற மாற்றத்துக் கான வாய்ப்பு குறித்துத் தனது சகோதரர்களுடன் விவாதிக்கக்கூட சோமு நேரம் ஒதுக்க விரும்புவ தில்லையே, ஏன்? இப்படி ஒரு மாற்றத்தைத் தொடங்கி வைக்க சோமுவைத் தவிர வேறு யாருக்குத் தகுதி இருக்கிறது? காரணம், தன் சொந்த நாட்டில் நிலவும் பிரச்னைகள், சவால்கள், ஆகியவற்றை அவன் நன்கறி வான். வளர்ச்சி என்ற நெடுஞ்சாலைக்கு இட்டுச் செல்லும் குறுக்குத் தெருக்கள், குண்டும் குழியுமான சாலைகள் இவற்றை அவன் நன்கறிவான். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், விளையாட்டு, வர்த்தகம், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் வளர்ச்சி.

ஆட்சியாளர்களுக்கும் குடிமக்களுக்குமான நடத்தை நெறிமுறைகளை வரையறுக்கும் வகையிலான நாகரிக வளர்ச்சி. ஆட்சியாளர் என்பதில், சட்ட அமைப்பு (அரசியல்வாதி), அதிகாரி (அரசு அதிகாரி), நீதித்துறை (நீதிமன்றங் கள், நீதியரசர்கள்) மற்றும் ஊடகங்கள் அகியவை உள்ளடங்கும்.

‘ஆட்சியாளர்கள்’ என்ற தலைப்பில் நீதித்துறை யையும் ஊடகங்களையும் நான் ஏன் சேர்க்கிறேன் என்று நீங்கள் வியக்கலாம். உங்களையும் என்னையும் அவர்களும் ஆள்கிறார்கள் என்பதை விளக்கினால், நீங்களும் அதை ஒப்புக்கொள்வீர்கள். நீதியரசர்கள், நீதிமன்றங்களில் தங்களின் தீர்ப்புகள் மூலமும் ஊடகங்கள், அச்சு, டிஜிட்டல், தொலைக் காட்சி, சமூக ஊடக மன்றங்கள் ஆகியவற்றின் மூலமும் நம்மை ஆள்கிறார்கள். உங்கள் வாழ்க்கையின் முக்கிய பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துவன ஊடகங்கள் என்றால் அது மிகையாகாது. உங்கள் மனதை ஆக்கிரமித்து, உங்கள் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்துவதுடன், அதிக நேரம் நினைவுகளில் அவற்றை நிலைபெறச் செய்தால், ஆன்மாவைக் கூட ஊடகங்கள் ஆளத் தொடங்கிவிடும்.

நீதியரசர்களையும் ஊடகங்களையும் பற்றிப் பேசும்போது, தமிழகத்தில் அண்மையில் நடந்த

## ஆளும் நீதித்துறையும் செய்தி ஊடகங்களும்!



சவுக்கு சங்கர்

இரண்டு சம்பவங்களை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, சென்னையில் உள்ள எனது நண்பர் விஜயராகவன் நரசிம்மன், மஹாகவி சுப்ரமணிய பாரதிபற்றி எழுதிய ஒரு நூல் வெளியீடு, மற்றொன்று, ‘நீதித் துறையில் உயர் பதவியில் இருக்கும் நீதியரசர்கள் அனைவரும் ‘ஊழல்வாதிகள்’ என்று கூறியதற்காக யூரியூபர் சவுக்கு சங்கருக்கு ஆறு மாதச் சிறை தண்டனை விதிக்கப்பட்ட விஷயம்.

முதலில் சங்கர் விவகாரத்தை எடுத்துக்கொள்கி றேன். தனது யூரியூப் பேட்டி ஒன்றில் அவர், நீதித்துறை முழுவதும் ஊழலில் மூழ்கியுள்ளது என்று குறிப்பிட்டதுடன், அந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தின் இரண்டு நபர் மதுரை நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தானே வாதாடிய நிலையில், தனது கருத்துக்காக வருத்தம் தெரிவிக்கவும் மறுத்துவிட்டார். அதோடு, மீண்டும் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு மீண்டும் இதேபோல் நீதித் துறையின் மீது தன் பாய்ச்சல் தொடரும் என்றும் மிரட்டினார். கடந்த வியாழனன்று இவருக்கு ஆறு மாதச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, மதுரை மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். மேல் முறை யீட்டுக்கு உச்ச நீதிமன்றத்தை நாடவிருப்பதால், தண்டனையை நிறுத்தி வைக்குமாறு இவர் விடுத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. ஒரு யூரியூபரின் கருத்துக்காக இத்தனை கடும் தண்டனை தருவதா? இவரை எச்சரித்துப் பெருந்தன்மையுடன் நீதிமன்றம் நடந்துகொண்டிருக்க வேண்டாமா? என்று இது குறித்துச் சர்ச்சை வெடித்தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி சந்துரு இந்தச் சிறை தண்டனைக்குக் கடும் கண்டனம்

தெரிவித்ததுடன், மேல் முறையீட்டுக்கு வழிசெய் யும் வகையில், இவரது தண்டனையை நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும், அது அவரது ‘அடிப் படை உரிமை’ என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

பொதுவாக அதிக கவனத்துடன் செய்தி வெளியிடும் பழம்பெரும் ‘த ஹிந்து’ நாளிதழ்கூட, இந்தத் தண்டனை குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளது. ஒரு சிறிய தவறுக்கு இத்தகைய தண்டனையா? என்று பொருள்படும் வகையில், ‘பட்டாம்பூச்சியைக் கொல்ல, வண்டிச் சக்கரமா?’ என்ற அலெக்சாண்டர் போப் என்பவரின் வார்த்தைகளையும் மேற்கோள் காட்டியுள்ளது.



### சென்னை மடல்
-பகவான் சிங்-

அரசின் தவறுகளை வெளிச்சம்போட்டுக் காட்டிய ஒரு செயற்பாட்டாளரான சங்கர், இப்போது யூரியூப் சனல் ஒன்றை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். அவர், ஆதாரமில்லாமல் பல முறை குற்றச்சாட்டுக்கும் ஆளாகியுள்ளார். நீதித்துறையே முழுதும் ஊழலில் ஊறிய துறை என்று ஒட்டுமொத்தமாகக் கூறியதால் இம்முறை இவர் சிக்கலில் சிக்கியுள்ளார்.

அது மட்டுமல்ல. சர்ச்சைக்குரிய பாஜக ஆதரவு யூரியூபர் மாரிதாஸ் என்பவர் நீதிபதியைச் சந்தித்த பின், காவல் துறை எப் ஐ ஆரிலிருந்து நிவாரணம் பெற்றார் என்று நீதிபதி ஜி ஆர் சுவாமிநாதன் குறித்து அவதூறு கருத்தை ஜூலையில் ட்வீட் செய்திருந்தார். நீதித் துறையில் தனது திறமைக்கும் கண்ணியத்துக்கும் பெயர்போன ஒரு நீதியரசர் குறித்து இத்தகைய அவதூற்றை அவர் கூறியது மிகத் தவறான செயல்.

சென்னையின் மற்றொரு நிகழ்வு, சென்ற ஞாயிறன்று நிகழ்ந்த பிரபல வழக்கறிஞரான விஜயராகவனின் மஹாகவி பாரதியார் மீதான ஒரு நூல் வெளியீட்டு விழா.

என் ‘ஈழநாடு’ வாசகர்களில் பாரதியாரின் எழுத்துகளைப் பலர் படித்திருப்பீர்கள். பாரத அன்னை மீதான காதல் உட்பட, மனித வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் தெய்வீகமாக வெளிப்படுத்தும் அவரது பாடல்களை ரசித்திருப்பீர்கள். மிகுந்த சிரமப்பட்டு, அதிகாரபூர்வமான தரவுகளின் அடிப்படையில் மஹாகவியின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் குறித்துத் தகவல் திரட்டி, தனது நூலில் மிக அருமையாக வழங்கியிருக்கிறார் அந்த நூலாசிரியர் விஜயராகவன்.

நூல் வெளியிட்டு விழாவில் பங்குபற்றிய

## வேரை அறியாத தலைமுறை

முக்கியமானவர்களில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி பி என் பிரகாஷ் ஒருவர். ‘வேரில்லாத இந்தத் தலைமுறையினரைப் பெருமை மிகுந்த நமது கடந்த காலத்துடன் இணைக்கும் முயற்சி இது’ என்று புத்தகத்தைப் பாராட்டினார் அவர். அவர் கூற விழையும் கருத்து, நமது தற்காலத் தலைமுறையினர் தமது வேர்களின் ஆழம் குறித்த எந்த அறிவும் அக்கறையும் இன்றி, மொபைல் போன்கள், ஏ டி எம் கார்டுகள் போன்ற உபகரணங்கள் மட்டுமேதான் உலகம் என்று வாழ்ந்து வருகிறார்கள் என்பதுதான்.

இது எவ்வளவு உண்மை! பாக்கு நீரிணையின் இரு புறமும் இதுதான் நிலைமை என்பது என் உறுதியான கருத்து. உலகின் பல நாடுகளில் வசிக்கும் நம் தமிழ்ச் சகோதரர்கள் செம்மைத் தமிழில் புலமையை விடுங்கள், மொழியே நன்றாகத் தெரியாமல் வளர்ந்து வருகின்றனர்.

வரும் தலைமுறையினர் ஈழப் போர் குறித்தும், பல தசாப்தங்களாக அதற்காகத் தியாகங்களைச் செய்தவர் கள் குறித்தும் அறிந்து கொள்வார்களா? இதுகுறித்து நான், தமிழ் அரசுக் கட்சியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரும் அமிர் அண்ணன், சிவா அண்ணன் உள்ளிட்ட பல மூத்த தலைவர்களைப்போல, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வலுவான தூண்களில் ஒருவருமான என் நண்பர் கரிகாலன் நவரத்தினத்துடன் பேசினேன். எதிர்காலத் தலைமுறையினர் தமது வேர்கள் குறித்து அறியும் வண்ணம் ஈழ வரலாற்றை எழுத வேண்டும் என்று நான் அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். நான் ‘அண்ணா’ என்று அன்புடன் அழைக்கும் கரிகாலன் எனது வேண்டுகோளை ஏற்பார் என்று நம்புகிறேன்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



# பிரிட்டிஷ் முடியாட்சியின் எதிர்காலம்

இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கிற்காக பிரிட்டன் தயாராகிக் கொண்டிருக்கிறது. லண்டன் பாராளு மன்ற வளாகத்தில் வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் கடந்த நான்கு நாட்க ளாக மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் அவரது பூதவு டல் நாளை திங்கட்கிழமை வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் ஆராத னைக்கு பிறகு வின்ஸ்டர் மாளிகை வளாகத்தில் அடக்கம் செய்யப்பட விருக்கிறது.

இது 6 தசாப்தங்களுக்கு பிறகு பிரிட்டன் காணும் அரசமரியாதையுடனான முதலாவது இறுதிச்சடங் காகும். அரச மரியாதையு டன் இறுதிச்சடங்குகள் அங்கு முடியாட்சி தலை வர்களுக்கே நடத்தப்படுவது வழக்கமாகும். ஆனால், போர்க்கால பிரதமர் சேர். வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கு 1965 ஜனவரியில் அரச மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடத்தப்பட்டது.

எலிசபெத் மகாராணி தனது 96 வது வயதில் மறைந்த தினமான செப் டெம்பர் 8 ஆம் திகதிக்கு சரியாக 7 வருடங்களுக்கு முன்னதாக (89 வயதில்) மிகவும் நீண்டகாலம் பத வியில் இருந்த பிரிட்டிஷ் முடியாட்சியாளர் என்ற சாதனையைப் படைத்தார். அவருக்கு முன்னர் விக்டோ ரியா மகாராணி 63 வருடங் கள் 7 மாதங்கள் பதவிவகித் தார். 70 வருடங்களும் 126 நாட்களும் பதவியில் இருந்த தாய்லாந்து மன்னர் 2016 அக்டோபர் 13 மரணம டைந்ததை அடுத்து மகா ராணி நவீன உலகின் மிக வும் நீண்டகால முடியாட்சி யாளர் என்ற பெருமையை தனதாக்கிக்கொண்டார். தனது வைரவிழாவை அவர் இவ் வருடம் ஜூன் 5 கொண்டாடினார்.

இதற்கு முன்னர் பிரெஞ்சு மன்னர் 14 வது லூயி (1643 -- 1715) 72 வரு டங்கள் 110 நாட்கள் ஆட்சியில் இருந்ததார். அவரே உலகின் மிகவும் நீண்டகாலம் முடியாட்சியில் இருந்த வர் என்று வரலாற்று பதிவுகள் கூறு கின்றன.

தனது ஏழு தசாப்த கால முடியாட் சியில் எலிசபெத் மகாராணி 15 பிரத மர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்தி ருக்கிறார். அவரின் முதலாவது பிரதமர் சேர். வின்ஸ்டன் சேர்ச்சில். 1952 ஆம் ஆண்டு தனது 25 வயதில் மகாராணியாக எலிசபெத் வந்தபோது சேர்ச்சிலுக்கு 77 வயது. இந்த இளம் பெண்ணுக்கு முடியாட்சிப் பொறுப் புக்களை நிறைவேற்றுவதில் இருக்கக் கூடிய ஆற்றல் குறித்து சேர்ச்சில் சந்தேகம் கிளப்பினாராம். ஆனால், இறுதியில் அவர் 70 வருடங்கள் மகாராணியாக இருந்து உலகில் சகல கண்டங்களின் மக்கள் மத்தியிலும் பிரபல்யமான அரச ஆளுமையாக விளங்கினார். பிரிட்டனுக்கு வெளியே "மகாராணி" என்று எவராவது பேசி னால் அது எலிசபெத் மகாராணியைத் தவிர வேறு எவருமாக இருந்திருக்க முடியாது.



தற்போதைய பிரதமர் லிஸ் ட்ர ஸூக்கு மகாராணி இறுதியாக அதுவும் மரணமடைவதற்கு இரு தினங்கள் முன் னதாக பதவிப்பிரமாணம் செய்து வைத்து அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். புதிய கன்சர் வேட்டிவ் பிரதமர் 1975 ஆம் ஆண்டு பிறந்தவர். அதாவது மகாராணியின் முதல் பிரதமரான சேர்ச்சில் பிறந்து 101 வருடங்களுக்கு பிறகு உலகிற்கு வந்த வர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக பட்டதாரியான லிஸ் ட்ரஸ் 1990 களின் நடுப்பகு தியில் மாணவ நாட்களில் முடியாட்சிக்கு எதிரான கருத் துக்களை வெளியிட்டவர். ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் பிறந்தார்கள் என்பதற்காக பரம்பரை பரம்பரையாக அரச தலைவர்களாக வருவதும் ஆட்சி செய்வதும் ஏதோ பிறப்புரிமை என்பது போன்ற நடைமுறையை உருவாக்கு வது வெறுக்கத்தக்கது என்று கூறிய அவர் சுமார் 30 வருடங் கள் கழித்து பிரதமராக மகா ராணியின் மறைவு குறித்து அறிவித்தபோது அவரை வானளாவ புகழ்ந் ததுடன் புதிய மன்னர் சார்ள் ஸூக்கு தேசத்தின் ஆதரவை தெரிவித் ததையும் காணக் கூடியதாக இருந்தது.

உண்மையில் மகாராணியாவ தற்கு பிறந்தவர் அல்ல எலிசபெத். விதி வசத்தினா லேயே அவர் முடி யாட்சி பொறுப்பை ஏற்க வேண்டி வந்தது. அவரின் தந்தையார் ஜோர்ஜின் மூத்த சகோதரர் எட்வேர்ட் எட்டா வது எட்வேர்ட் மன்னராக 1936 ஜனவரி 20 முடிசூடினார். ஆனால், ஏற்கெனவே மணம் முடித்து விவாகரத்து செய்து கொண்ட அமெரிக்க கத்தோ லிக்க பெண்மணி வாலிஸ் சிம்ப்சன் மீதான காதலினால் அந்த வருடம் முடிவடைவ தற்கு முன்னதாக டிசம்பர் 11 மன்னர் எட்வேர்ட் முடிதுறந் தார்.

அந்த பெண்மணியை திரு மணம் செய்து பிரிட்டனின் இராணியாக்குவதை பிரிட்ட னின் எழுதப்படாத அரசியல மைப்பு தடுத்தது. முடியா அல் லது சிம்ப்சனா என்ற தெரிவில் மன்னர் சிம்ப்சனுக்கே முன்னுரிமை கொடுத் தார். ( காதல் அல்ல, ஜேர்மன் நாஜிக ளுக்கு ஆதரவாளராக இருந்ததால் கிளம்பிய எதிர்ப்புக்கு முகங்கொடுக்க முடியாமல் போனதே அவர் முடி துறந்ததற்கு உண்மையான காரணம் என்றும் அந்த நேரத்தில் விமர்சனம் முன்வைக்கப்பட்டது) முடிதுறந்த மன்னரின் சகோதரர் -- எலிசபெத்தின் தந்தையார் -- எதிர்பார்த்திராத வகை யில் ஆறாவது ஜோர்ஜ் மன்னராக முடிசூடவேண்டியேற்பட்டது. இந்த திடீர் மாற்றம் எலிசபெத்தை பத்து வய தில் முடிக்குரிய இளவரசியாக்கியது.

கிரேக்க மற்றும் டென்மார்க் இள வரசரான பிலிப்ஸை தனது 21 வயதில் திருமணம் செய்த எலிசபெத் நான்கு பிள்ளைகளுக்கு தாயானார். மகிழ்ச்சி யான குடும்பவாழ்க்கைக்கு மத்தியில் அவர் 1952 முற்பகுதியில் கணவருடன் ஆபிரிக்காவுக்கு சுற்றுலாவுக்கு சென்ற வேளையில் பெப்ரவரி 6 மன்னர் ஜோர்ஜ் தனது 57 வயதில் மரணம டைந்தார்.

அன்றைய தினம் எலிசபெத்தும் கணவரும் கென்யாவில் இருந்தனர். அங்கு மரமொன்றின் மேல் அமைக்கப் பட்டிருந்த தங்குமிடத்தில் நித்திரை யில் இருந்த அவரை எழுப்பி கணவர் தந்தையார் இறந்த செய்தியை அமைதி யாக கூறினார். இளவரசியாக மர உச்சி படுக்கைக்கு சென்ற எலிசபெத் இங்கி லாந்தின் மகாராணியாக கீழே இறங் கினார். 1953 ஜூன் 2 அவரின் முடி சூட்டு வைபவம் நடைபெற்றது.

மகாராணியின் முடியாட்சி கால கட்டம் உலகில் பல போர்களை, அனர்த்தங்களை, அரசியல் நெருக்கடி களை, பெருந்தொற்று நோய்களை, ஊழல் விவகாரங்களை, பொருளாதார நெருக்கடிகளை கண்டது. அவரின் காலத்தில் உலகம் அடையாளம் காண முடியாத அளவுக்கு மாற்றமடைந்தது. அவர் ஒரு அரசியல்வாதி இல்லாவிட் டாலும், உலகம் முடியாட்சியை பெரு மளவுக்கு விரும்பாவிட்டாலும் தலை மைத்துவ ஆளுமையைப் பொறுத்த வரை ஒரு உலக விக்கிரகமாக விளங்கி னார்.

மனிதகுல வரலாற்றில் மிகவும் கூடுத லான அளவுக்கு புகைப்படம் எடுக்கப் பட்ட பெண்மணியாகக் கூட மகா ராணியே விளங்கினார் எனலாம். கடந்த நூற்றாண்டின் பின் அரைப்பகுதி தொடக்கம் இந்த நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தின் முற்பகுதி வரை உலகின் எந்த தலைவரை விடவும் நீண்டகாலம் பதவியில் இருந்த அவர் வெளிநாட்டு பயணங்களைப் பொறுத்த வரை, சாதனை படைத்தவராகவும் விளங்குகிறார். இந்த காலப்பகுதியில் தான் வின்ஸ்டன் சேர்ச்சில், சார்ள்ஸ் டீ கோல், மாவோ சேதுங், மார்ஷல் டிட்டோ, அப்துல் கமால் நாசர், ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, பிடல் காஸ்ட்ரோ, றொனால்ட் றேகன், மார்கரட் தட்சர், பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் மற்றும் மிக்கெயில் கொர்பச்சேவ் என்று முக்கி யமான உலகத் தலைவர்கள் ஆட்சி செய்து வரலாற்றிற்குள் சென்றார்கள்.

74 வருடகால மணவாழ்க்கைக்கு பிறகு மகாராணியின் கணவர் இளவ ரசர் பிலிப் 2021 வருடம் ஏப்ரில் 9 தனது 100 வது பிறந்ததினத்துக்கு 62 நாட்கள் முன்னதாக காலமானார். அதற்கு பிறகு ஒரு வருடம் 4 மாதங்கள் 9 நாட்கள் கழித்து மகாராணி தனது 96 வயதில் கணவரை பின் தொடர்ந்தார்.



அதைத் தொடர்ந்து உடனடி யாகவே அவர்களின் மூத்த மகன் சார்ள்ஸ் மன்னரானார். அவருக்கு வயது 73. மிகவும் முதிர்ந்த வய தில் பிரிட்டிஷ் முடியாட்சியை பொறுப்பேற்ற அவர் மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் என்று அழைக் கப்படுகிறார். அவரின் மூத்த மகன் வில்லியம் 40 வயதில் அடுத்த முடிக்குரிய இளவரசாகி யிருக்கிறார். 21 நூற்றாண்டில் முடியாட்சி நிறுவனம் செழிப் பதோ அல்லது பிழைத்திருப் பதோ இவர்கள் இருவரினதும் கைகளில்தான் இருக்கிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பைசர் தடுப்பூசி: போலிப்பிரச்சாரங்களை நம்பாதீர்கள்!

மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்




கொரோனா நோய்க்கு எதிரான தடுப்பூசிகளில் பைசர் (Pfizer) தடுப்பூசியானது உரிய முறையில் -60 சி தொடக்கம் -90 சி பேணப்பட்டால் அதனுடைய ஆயுள் காலம் 9 மாதத்தில் இருந்து 12 மாதங்களுக்கு அதிகரிக்கப்படலாம் என்பதை உரிய ஆய்வுகளின் மூலமாக நிரூபிக்கப்பட்டு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA ) நிறுவனத்தாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தாலும் (WHO ) ஏற்றுக் கொள்ளப்பட்டு அமெரிக்கா முதலான உலகின் பல நாடுகளிலும் வழங்கப்பட்டு வருகிறது (ஆதாரம் : https://www.fda.gov/.../mcm.../expiration-dating-extension )

இந்த தடுப்பூசியின் விலை 19.5 அமெரிக்க டாலர் அல்லது இலங்கை ரூபாய்களில் 7000 ஆகும். உலக சுகாதார ஸ்தாபனம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கோடிக்கணக்கில் செலவழித்து கொரோனா நோயினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைப்பதற்காக இலங்கை போன்ற வறிய நாடுகளுக்கு இந்த தடுப்பூசியை இலவசமாக தருவித்து இருக்கிறது.

வடக்கில் குறிப்பாக வன்னி பகுதியில் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களின் வீதம் குறைவாக இருப்பதுடன் கொரோனாவால் உயிரிழந்தவர்களில் பலர் ஒரு தடவை கூட தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நாட்டின் ஏனைய மாகாணங்களில் அறிவுறுத்தப்பட்டது போல் வடக்கிலும் ஆயுள் காலம் நீடிக்கப்பட்ட பைசர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. இது தொடர்பாக அனைத்து ஊடகங்களுக்கும் விபரங்கள் சுகாதார திணைக்களத்தினால் சில மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு இருந்தது.

உண்மை நிலை இவ்வாறு இருக்க பொறுப்பு வாய்ந்த மருத்துவர்களையோ, துறைசார் மருத்துவ நிபுணர்களையோ கலந்தாலோசிக்காது அல்லது ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் என்ன நடக்கிறது என்பதைக் கூட ஆராயாது சில தமிழ் ஊடகங்கள் வேண்டுமென்றே ஏனைய மாகாணங்களில் நிராகரிக்கப்பட்ட காலாவதியான தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு சிங்கள மருத்துவர் பாடசாலை மாணவர்களை பலவந்தப்படுத்துவதாக விஷமத்தனமான இனவாதப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் முன்னர் கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத நிலையில் அவர்களுக்கு இப்போது இலங்கையில் தடுப்பூசி வழங்கப்படுகிறது. கனடா உட்பட பல நாடுகளில் தற்போது 6 மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் தொடக்கம் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கப்படுகிறது.

ஊடகங்களின் விஷமப் பிரச்சாரங்களினால் பலர் வட பகுதியில் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதை நிராகரிக்கும் அபாயம் தோன்றி உள்ளதுடன் ஏற்கெனவே தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்கள் தமக்கு ஏற்றப்பட்ட மருந்து தொடர்பாக மனக் கிலேசம் அடைந்துள்ளனர்.

# பிரிட்டிஷ் முடியாட்சியின்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**குடியரசுவாதம்**

பிரிட்டனில் முடியாட்சி மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருப்பதைப் போன்றே முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவந்து ஜனநாயக குடியரசை நிறுவவேண்டும் என்று கோரும் குடியரசுவாதத்துக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. எலிசபெத் மகாராணியின் காலப் பகுதியில் குடியரசுவாத குமுறல்கள் அவ்வப்போது தலைகாட்டியிருந்தாலும் கூட, அவர் மக்கள் மத்தியில் அனுபவித்த நேசம், மதிப்பு காரணமாக முடியாட்சியை இல்லாதொழித்துவிட வேண்டும் என்ற இயக்கத்தினால் ஒரு அளவிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது.



இப்போது மகாராணி மறைந்து மக்கள் மத்தியில் குறைந்தளவு செல்வாக்கைக் கொண்ட சார்ள்ஸ் மன்னராகியிருக்கும் நிலையில் 1000 வருட கால முடியாட்சி நிறுவனத்தின் முடிவை விரைவுபடுத்த முடியும் என்று குடியரசுவாதிகள் நம்புவதாக ராய்ட்டர்ஸ் செய்தியொன்று கடந்தவாரம் தெரிவித்தது.

பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரை, முடியாட்சி என்றாலே அது மகாராணிதான். அவரின் மறைவுக்கு பிறகு அந்த நிறுவனத்தின் எதிர்காலம் பெரும் ஆபத்துக்குள்ளாகும் என்று எதிர்பார்க்கும் குடியரசுவாதிகள் சார்ள்ஸ் மன்னராக வந்திருக்கலாம், ஆனால் மகாராணிக்கு மக்கள் காட்டிய பணிவையும் மதிப்பையும் அவரால் பெறமுடியாது. நவீன ஜனநாயகத்தில் அரச குடும்பத்துக்கு இடமிருக்க முடியாது. அந்த குடும்பத்தை பேணுவதற்கு பிரமாண்டமான செலவும் நாட்டுக்கு கட்டுப்படியாகாது என்று வாதிடத் தொடங்கியிருப்பதாக அந்த செய்தி கூறுகிறது.



முடியாட்சி நிறுவனத்தினால் ஒவ்வொரு பிரிட்டிஷ் குடிமகனுக்கும் வருடாந்தம் ஒரு பவுணுக்கும் பணம் செலவாகிறது என்று அரச குடும்ப அதிகாரிகள் கூறுகின்ற அதேவேளை " றிப்பளிக்" என்ற குடியரசுவாத குழு வருடாந்தம் நாட்டுக்கு சுமார் 35 கோடி பவுண்கள் செலவாகிறது என்று கூறுகிறது.

அரச குடும்பத்தின் நிதி வளங்கள் மற்றும் அவர்களுக்கு நேரடியாக சொந்தமாக இருக்கும் சொத்துக்கள் பற்றி ஒரு தெளிவற்ற தன்மை இருப்பதால் அவர்களின் ஒட்டுமொத்த செல்வத்தை மதிப்பிடுவதும் கஷ்டமாக இருக்கிறது. ராய்ட்டர்ஸினால் 2015 மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று அரச குடும்பத்தின் அண்ணளவான சொத்துக்கள் 2300 கோடி பவுண்கள் பெறுமதியானவை என்று மதிப்பிட்டது.

பரந்தளவு பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் முடியாட்சியை ஆதரிப்பதாகவும் மகாராணிக்கான ஆதரவும் அதே மட்டத்தில் அல்லது கூடுதலாக இருந்ததாகவும் அபிப்பிராய வாக்கெடுப்புகள் தொடர்ச்சியாக வெளிக் காட்டி வந்தன. மகாராணி உயிரோடிருக்கும் வரை முறைமையை மாற்றுவதற்கு தங்களுக்கு வாய்ப்புக்கள் குறைவு என் பதை குடியரசுவாதிகளும் ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறப்படுகிறது.

அதேவேளை, முடியாட்சிக்கான ஆதரவு குறிப்பாக இளம் சந்ததியினர் மத்தியில் சரிந்து கொண்டு வருவதையும் சார்ள்ஸ் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு கொண்டவர் அல்ல என்பதையும் கூட அபிப்பிராய வாக்கெடுப்புகளின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

மன்னர் என்ற வகையில் சார்ள்ஸுக்கான ஆதரவு ஏறியிறங்குவதாக இருக்கிறதென்றும் சில அபிப்பிராய வாக்கெடுப்புகள் முடி இளவரசர் வில்லியத்துக்கு கையளிக்கப்படுவதை பலர் விரும்புவதை காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

மன்னரின் இரண்டாவது மனைவி கமிலாவும் மக்கள் மத்தியில் வேற்றுமை உணர்வுகளை தோற்றுவிக்கக்கூடிய ஒருவராக இருக்கிறார் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. வில்லியத்துக்கும் மனைவி கேற்றுக்கும் இருக்கும் பெரும் செல்வாக்கு முடியாட்சியை ஒழிப்பதை நோக்கி எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய நகர்வுகளை தடுக்க உதவ முடியும் என்பது முடியாட்சி ஆதரவு சக்திகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறதாம்.

பிரிட்டனில் முடியாட்சியை அகற்றுவதற்கான தெளிவான பாதை இல்லை. அதற்கான நடைமுறைகளை தெளிவுபடுத்தும் வகையிலான ஒரு ஒழுங்கமைவான அரசியலமைப்பும் அந்த நாட்டில் இல்லை. சகல கட்சிகளுக்குள்ளும் குடியரசுவாதத்துக்கு ஆதரவானவர்களும் இருக்கிறார்கள் என்றபோதிலும் பிரதான அரசியல் கட்சிகளான கன்சர்வேட்டிவ் கட்சி, தொழிற்கட்சி, லிபரல் ஜனநாயக கட்சி மற்றும் ஸ்கொட்லாந்து தேசிய கட்சி ஆகியவை முடியாட்சி குறித்து தெளிவான கொள்கைகளை கொண்டிருக்கவில்லை என்று அவதானிகள் கூறுகிறார்கள். பெரியளவில் மக்கள் அபிப்பிராயம் முடியாட்சிக்கு எதிராக திரும்பினால், அரச குடும்பம் தொடர முடியாமல் போகும் என்று முடியாட்சியை எதிர்ப்பவர்கள் கருதுகிறார்கள்.

வரலாற்றில் பிரிட்டிஷ் முடியாட்சியின் தொடர்ச்சி ஒரு தடவை மாத்திரமே குறுக்கீடு செய்யப்பட்டது. 1649 ஆண்டில் முதலாவது சார்ள்ஸ் மன்னர் மீது தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடைபெற்றது. குற்றவாளியாகக் காணப்பட்ட அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து ஆங்கில குடியரசு ஒன்று குறுகிய காலம் நடைமுறையில் இருந்தது. ஆனால் அந்த குடியரசு 1660 முடிவுக்கு வந்து மீண்டும் முடியாட்சி நிறுவப்பட்டது.

முடியாட்சியை ஒழிக்கக் கோருவதை ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாக கருதும் சட்டம் இன்னமும் பிரிட்டனில் நடைமுறையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# 51வது அமர்வின் புதிய தீர்மானத்துக்கு 2024 செப்டம்பர் வரை அவகாசம்!

**பனங்காட்டான்**

கடந்து போகின்ற இந்த நாடகள் பல வகையிலும் முக்கியமானதாக பதிவாகின்றது. சர்வதேச அரங்கில் மட்டுமன்றி உள்ளூர் மட்டத்திலும் இந்தப் பொழுது பேசப்படுவதாகியுள்ளது.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளைக் கட்டியாண்ட பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் சின்னமாகத் திகழ்ந்த எலிசபெத் அரசியின் மறைவு - அவரது எழுபது ஆண்டுகால முடியாட்சி ஆளுமை என்பவை உலகை அப்பக்கம் இழுத்து வைத்திருக்கிறது. உலக நாடுகள் பலவற்றின் தலைவர்கள் இந்த மாதம் 19ம் திகதி இடம்பெறும் அவரது இறுதி மரியாதை நிகழ்வில் பங்குபற்ற லண்டன் சென்றுள்ளனர்.

எனினும், ஒரு விடயத்தை கூர்ந்து கவனிக்க வைக்கும் வகையில் இலங்கைத் தமிழர் சமூகம் செயலில் காட்டியுள்ளது. இலங்கையிலுள்ள தமிழ்த் தேசியம் சார்ந்த அரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் எலிசபெத் அரசியின் மறைவுக்கு இதனை எழுதும்வரை அஞ்சலி அறிக்கைகளை வெளியிடவில்லை. இந்த மறைவை தெரியாதது போலவே நடைமுறையில் காட்டி வருகின்றனர்.

இலங்கையில் தமிழர் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள அரசாட்சியின் கீழ் உரிமைகளை பறிகொடுத்து வாழ்வதற்கும், தங்களது பிறப்புரிமைச் சுதந்திரத்துக்காகப் போராடி வருவதற்கும் பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரம் என்ற பெயரில் வழங்கிய அரசியலமைப்பே காரணம் என்ற தார்மீக கோபமே இதற்கான அடிப்படை என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

இதே நாட்களில், தமிழினத்தின் பாதுகாப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் நீராகாரம் கூட அருந்தாது உயிர்க்கொடை வழங்கிய திலீபனின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இணைந்து கொண்டுள்ளது.

தெற்கு அரசியலின் நிலைமாறு காலம் தந்துள்ள சிறு இடைவெளி, இந்த வருடம் திலீபனின் நினைவேந்தலை நெருக்குவாரமின்றி பொதுவெளியில் நிகழ்த்த இடமளித்துள்ளது. இதனால் தமிழர் தாயகமெங்கும் வணக்க நிகழ்வுகளும் மலரஞ்சலிகளும் பேரணிகளும் இடம்பெறுகின்றன.

சிங்கள அரசியல் தலைமை கண்டும் காணாதது போன்று நினைவேந்தலுக்கு அமைதி காத்து வருகின்றதாயினும், தமிழர் தரப்புகள் தமக்குள்ளே மோதிக் கொள்ளும் அசாதாரண சூழலை காண முடிகிறது. திலீபனின் நினைவேந்தலில் அரசியல் பேசக்கூடாது என்ற கேள்வி எழும்பியுள்ளது. திலீபன் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்தவர். அதன் வழியாகவே சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டு சரித்திர நாயகனானவர். இவரது நினைவேந்தலில் அரசியல் பேசக்கூடாதென்றால், வேறெங்கு அரசியல் பேசுவது என்ற கேள்விக்குப் பதில் தேட வேண்டியுள்ளது. இதற்கான பதிலுக்கு சிலவேளை காத்திருக்க வேண்டி நேரிடலாம்.

இலங்கை மக்கள் அனைவரையும் அடுத்த மாதம் முதல் வாரம் வரையான காலம் ஜெனிவா தம்பக்கம் வைத்திருக்கும். 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுற்றதாக இலங்கை அரசு அறிவித்த அடுத்த வாரத்தில் ஆரம்பமான சர்வதேசத்தின் வகிபாகம், இன்றுவரை முடிவு காணாது இழுபட்டுக் கொண்டே போகிறது. அப்போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகமாக இருந்த பான் கீ மூன் நேரடியாக வன்னி சென்று களநிலைமையை ஆராய்ந்து முகாம்களில் அடைபட்டிருந்த மக்களைச் சந்தித்தார். மே 26ம் திகதி அவரும் அப்போது ஜனாதிபதியாகவிருந்த மகிந்த ராஜபக்சவும் இது தொடர்பாக இணைந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

இந்த அறிக்கையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்தது. “சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல் தொடர்பான பொறுப்புக்கூறுவது தொடர்பான நடவடிக்கைக்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்தது”. (Sri Lankan government agree to take measures on accountability for violations of Internati onal humanitarian and human rights law).



பான் கீ மூனும் மகிந்தவும் தங்கள் பதவிகளிலிருந்து போய் பல வருடங்களாகியும் இணை அறிக்கை அமலாக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான 19வது இலக்கத் தீர்மானம் 47 உறுப்பினர்களில் 24 பேரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பெற்றது.

இதன் பின்னர் 2015ம் ஆண்டு மார்ச் மாதம் 46:1 இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவாயினும் எதுவுமே முன்னோக்கி நகரவில்லை. இதில் 30:1 இலக்கத் தீர்மானம் முக்கியமானது. இதற்கு அப்போதைய இலங்கை ஆட்சி பீடம் இணக்கமளித்தது. 2021 மார்ச்சில் 46:1 இலக்கத் தீர்மானத்தை அமெரிக்கா முன்னெடுத்தது. அப்போதிருந்த மைத்திரி-ரணில் அரசு இதற்கு இணைஅனு சரணை வழங்கியது.

நாலரை ஆண்டுகள் மைத்திரி-ரணில் அரசு ஆட்சியில் இருந்தபோதும் தீர்மானத்தைப் பொறுத்தளவில் அது வெறும் தீர்மானமாகவே இருந்தது. எதிர்க்கட்சியாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒவ்வொரு தடவையும் இந்த அரசுக்குச் சாதகமாக காலநீடிப்பை பெற்றுக் கொடுத்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த கோதபாய இந்தத் தீர்மானத்தை முழுமையாக நிராகரித்ததோடு, ஜெனிவாவுக்கு இடம் கொடுக்க மறுத்து வந்தார்.

இத்தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்ததையொட்டிய விபரங்களை இந்த மாத 51வது அமர்வின் ஆரம்ப அறிக்கையில் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் விரிவாகச் சுட்டியுள்ளது. அத்துடன் மேலதிகமாக பொருளாதார குற்றச்சாட்டையும் இணைத்துள்ளது. புதிதாக நிறைவேற்ற வேண்டிய தீர்மானத்தின் மூலவரைபை ஏழு கூட்டுக் கட்சிகளின் தலைமையிலான பிரித்தானியா வெளியிட்டுள்ளது.

**இப்போதைய 51வது அமர்வில் நிறைவேற்றப்படும் தீர்மானமானது 53, 54, 55, 57ம் அமர்வுகளுக்கென கால அவகாசம் வழங்கி இலங்கையை மகிழ்ச்சிப் படுத்தக்கூடியது. ஜெனிவாவை பதின்மூன்று வருடங்கள் நம்பியிருக்கும் தமிழருக்கு நீதி கிடைக்க இன்னும் எத்தனை இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும்?**

இதனையொட்டி கிடைக்கப்பெறும் கருத்துகளை மையப்படுத்தி இறுதி அறிக்கை தீர்மானமாக அடுத்த வாரம் பேரவையில் சமர்ப்பிக்கப்படும். வழமைபோல இதற்கும் இலங்கை கால அவகாசம் பெறும். இலங்கை மீதான 46:1 தீர்மானத்தை வலுப்படுத்தும் வகையில் வரவுள்ள தீர்மானத்தை செயற்படுத்த இரண்டு ஆண்டுகள் வழங்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்க செனட் சபை கோரியுள்ளது. புதிய ஏழு அனுசரணை நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகவிருப்பதால் இரண்டு வருட கால அவகாசம் ஏற்கப்படும் சூழல் நிறையவே உண்டு.



ராஜபக்ச குடும்பத்தின் மோசமான நிர்வாகம், பொருளாதா சீர்கேடு ஆகியவற்றுக்குள் சவாலாகியிருக்கும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண சர்வதேச அணுகுமுறை தேவையென்பதால் இந்தக் கால அவகாசத்தை அமெரிக்க செனட் சபை கேட்டுள்ளது.

புதிய தீர்மானத்தின் முதல் வரைபு தமிழர் தரப்புக்கு நம்பிக்கை ஊட்டவில்லை. இலங்கைக்கு கால அவகாசம் வழங்கி போர்க்குற்றம், பொறுப்புக்கூறல், சர்வதேச கலப்பு நீதிப் பொறிமுறை ஆகியவற்றை நீர்த்துப் போக செய்யுமென்ற அச்சம் தமிழர் தரப்பிடம் உள்ளது. அதே சமயம் இத்தீர்மானத்தை வரவேற்கும் தமிழர் தரப்புகளும் உண்டு.

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டு, ராஜபக்சக்களின் ஆட்சிக்கால ஊழல் குற்றச்சாட்டு என்பவை அதிகபட்சத்தில் முன்னைய ஆட்சிகளை நோக்கியது. ஆதலால் இது விடயத்தில் ரணிலின் செயற்பாடுகள் மறைமுகமாக ஜெனிவா பக்கத்துக்கு இருக்கக் கூடும்.

எதுவாக இருப்பினும், இப்போதைய 51வது அமர்வில் நிறைவேற்றப்படும் தீர்மானமானது 53, 54, 55, 57ம் அமர்வுகளுக்கென கால அவகாசம் வழங்கி இலங்கையை மகிழ்ச்சிப் படுத்தக் கூடும். இது விடயத்தில் பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன:

“நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் தாக்கம் சம்பந்தமாக நிலைமைகள் பற்றிய கண்காணிப்பு அறிக்கையை அதிகரிக்குமாறும், மனித உரிமைகள் பேரவையின் 53, 55ம் அமர்வுகளின் பேரவைக்கு வாய் மூலம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் பேரவை கூறுகின்றது. 54வது அமர்வில் தெரிவிக்கப்படும் விடயங்களை உள்ளடக்கி 57வது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான விரிவான அறிக்கை உரையாடலுக்கும் விவாதிப்பதற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்”. இதுவே அதிகபட்சமாக மனித உரிமைகள் பேரவையால் இப்போதைக்கு மேற்கொள்ளக்கூடிய சாத்தியப்படும் நடைமுறை.

இறுதி வரைபில் இவைகளில் இறுக்கமான மாற்றங்கள் ஏற்கப்படாதவரையில், தற்போதைய 51வது அமர்வு தமிழ் மக்களையோ தமிழ் தலைமைகளையோ நம்ப வைக்கப் போவதில்லை. இரண்டு வருட கால அவகாசம் என்பது சிங்கள தேச அரசியலைப் பொறுத்தளவில் அதற்கு அதிகூடிய வாய்ப்பளிக்கும் காலமாகவே மாறக்கூடும்.

# தடையால் தடுமாறும் புடவை வியாபாரம்...!



அறிக்கையிடல் REPORTING
என். குகராஜ்

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தபோன்று" என்றொரு முதுமொழி நம் மத்தியில் உள்ளது. இதுதான் இன்று இலங்கை மக்களின் நிலைமை. பொருளாதார பாதிப்பால் அதிகம் இலாபம் பார்ப்பது வியாபாரிகள்தான் என்ற மனநிலையும் கணிசமானளவில் நம் சமூகத்தில் உள்ளது. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாகவே வியாபாரமின்றி – குறைந்து பாதிக்கப்ட்டுள்ளார்கள் நம் புடவை வியாபாரிகள்.

கொரோனா தொற்றால் கடந்த இரு வருடங்களாக பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் மீண்டெழுந்து விடலாம் என்ற நம்பிக்கையைப் பற்றியபோது, இறக்குமதி கட்டுப்பாட்டை – உடைகளுக்கான கட்டுப் பாட்டை அறிவித்தது அரசாங்கம். இந்த இறக்குமதி தடை இரு வாரங் களுக்கு ஒரு முறை பரிசோதிக்கப்படும் என்று கூறினாலும் நாட்டின் பொருளாதார நிலை அது தளர்வதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்நிலையில் தங்கள் நிலைமைகளை – கஷ்டங்களை – துன்பங்களை – எதிர்நோக்கும் சிக்கல்கள் – பிரச்னைகளை எடுத்துரைக்கின்றனர் புடவை வர்த்தகர்கள்.

## வியாபாரம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நாம்

**சற்குண ராஜா**
**புடவை கடை உரிமையாளர் ,யாழ்ப்பாணம் நகரம்**



யாழ்ப்பாண உடு புடவை வியாபாரத்தைப் பொறுத்த வரை பொருட்களின் வரவு மிக குறைவாகவும் மிக மந்த மாகவும் இருக்கின்றது. எரி பொருள் பொருள் தட்டுப்பாடு மின்சாரத் தட்டுப்பாடு இவற்றின் ஊடாக புடவை கடைகளில் வியாபாரம் வெகுவாக பாதிக்கப்படுகின்றது. இருந்தும் இறக்குமதி பொருட்களின் வருகையில் குறைவு நுகர்வோரின் தேவைக்கேற்ப ஈடுசெய்ய முடியாத ஒரு நிலைப்பாடு இருப்பதால் இந்த புடவைகளுக்கான தட்டுப்பாடு வெகுவாக இருக்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட பண வீக்கம் - பண முடக்கம் மற்றும் இன்னோரன்ன பிரச்னைகளால் இந்தபுடவை வர்த்தகம் வெகுவாக பாதிக்கப்படுகின்றது. வெகுவாக அல்லல்படுகின்றது. பல வியாபாரிகள் வியாபாரம் செய்ய முடியாத துர்பாக்கிய நிலையும் ஏற்பட் டுள்ளது.

உடுபுடவைகளின் வரத்து மிகவும்குறைவு. கொழும்பிலி ருந்து எடுக்கும் மொத்த வியாபாரமாக இருக்கட்டும் இன்னொ ரன்ன இறக்குமதியாளர்களிடமிருந்து வாங்கும் பொருட்களாக இருக்கட்டும் இந்த பண பண்டமாற்று - பணவீக்கம் இவற்றால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

சிக்கலான நிலையில் கூடிய விலையில் தான் பொருட்களை விற்க வேண்டியதாக உள்ளது இதன் காரணமாக எதிர்வரும் தீபாவளி பண்டிகையின் போது எமக்கு வியாபாரம் பெரிதாக இடம்பெற சாத்திய கூறுகள் இல்லை. வியாபாரத்தை இவ்வாறு மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்களின் தெரிவுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

இருந்தும் ஏதோ வகையில் யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள புடவை வியாபாரிகள் எமது வியாபாரத்தைக் கொண்டு செல்லக்கூடியவாறு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

## பொருளாதார நெருக்கடி புடவை வர்த்தகத்தையே அதிகம் பாதித்துள்ளது

**ஆர். ஜெயசேகரன்,**
**யாழ். வணிகர்கழக உப தலைவர்**



தற்போதைய நிலையில் - அதாவது தீபாவளி பண்டிகை வருகின்ற நிலையில் யாழ்ப்பாண நகரில் பொதுமக்கள் உடுபுடவைகள் பெறுவதில் இடர்பாடு உள்ளது.

அதாவது தைக்கப்பட்ட ஆடைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் துணி வகைகள் மாத்திரம் இறக்குமதி செய்யமுடியும் அந்த வகையில் சில அழகு சாதன பொருட் கள் மற்றும் உடு புடைவைகள் தற்போது புதிய நடைமுறையின் படி தடை செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் இந்த முறை தீபாவளியை முன்னிட்டு உடு புடவை வர்த்தகர்கள் மத்தியில் பெரும் தாக்கம் ஏற்பட்டு இருக்கின்றது. வர்த்தக நடவடிக்கைகளும் பாதிப்படையக் கூடிய நிலை காணப்படு கின்றது. ஏனென்றால் பொது மக்களுக்கு தேவையான அளவு உடு புடைவைகளை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறான வழங்க முடியாத சூழ்நிலை தற்போது நிலவுகின்றது.

## இறக்குமதி தடையால் மேலும் நலிவடைந்துள்ளோம்

**துரைராஜா குணநேசன், புடவை கடை வர்த்தகர், யாழ்ப்பாணம் நகரம்**



தற்போது இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதால் தைத்த ஆடைகளை இறக்குமதி செய்வதில் பெரும் இடர்பாடுகள் காணப்படுகின்றன. பப்ளின் துணி கொரோனா காலத்தில் 80 ரூபாய் விற்றது. பின்னர் 120 ஆக விற்றது தற்போது 300 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. பப்ளினின் 120தானே ஏன் 300 ரூபாய் விற்கிறீர்கள் என கேட்கின்றார்கள். ஆனால், தற்போது பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் பொருட்களின் விலை உயர்வடைந்ததன் காரணமாக புடவைகளின் விலையும் உயர்வடைந்துள்ளது.

90 ரூபாய்க்கு விற்ற பருப்பு இன்று 400 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகின்றது. ஆனால், அதனை வாங்கி பயன் பெறும் பொதுமக்கள் புடவை விலையைக் கேட்கும்போது தடுமாறுகின்ற நிலை காணப்படுகின்றது.

புடவை வர்த்தகர்கள் மற்றும் அழகு சாதன பொருட்கள் விற்கும் வர்த்தகர்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாக, இந்தியாவில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதிலும் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகிறோம்.

முன்னர் ஆயிரம் ரூபாய்க்கு கொள்வனவுசெய்த பொருளை தற்போது ஆறாயிரம் ரூபாய்க்கு வாங்க வேண்டியதாக உள்ளது. தற்போதைய விலையில் எமது புடவை மற்றும் அழகு சாதன பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. ஏனென்றால் மக்களுக்கு பொருளாதார நெருக்கடி மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. தற்போதைய விலையில் எமக்கு கிடைக்கின்ற இலாபத்தைக் குறைத்து பொருட்களின் விலைகளை சற்று குறைத்து விற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எமது வாடிக்கையாளர்களை இழந்து விடக்கூடாது என்பதற்காக கொள்வனவு செய்யும் விலைக்கு சில பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. தற்போது எமது கடைகளில் மிகவும் சுதந்திரமாக நிற்கக் கூடியதாக உள்ளது. ஏனென்றால், வியாபாரம் இல்லை கடைகளுக்கு மக்கள் வருவது குறைவடைந்து விட்டது. கடை வாசலில் நின்று கொண்டு விலையை விசாரித்து விட்டு செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

முன்னர் தற்போதைய காலப்பகுதி என்றால் வெளிநாட்டவர்கள் இங்கே வந்து நிற்கும் காலம். இந்தக் காலத்தில் எமது உடுபுடவைகளுக்கான வியாபாரம் அதிகமாக இடம்பெறும். தற்போது உடுபுடவைகளின் விலை அதிகரித்துள்ளது இறக்குமதியும் நிறுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தி மற்றும் உள்நாட்டில்தான் கொள்வனவும் இடம்பெறுகின்றது தற்போது துணி வகைகளும் விலை அதிகரித்துள்ளதால் உள்ளாடைகள் மற்றும் ஏனைய உடுபுடவைகளின் விலை அதிகரித்துள்ளன. எமது வியாபாரம் சடுதியாக குறைவ டைந்த நிலை காணப்படுகின்றது. எதிர் வரும் தீபாவளி பண்டிகையின்போதும் வியாபாரம் இடம்பெறாத நிலை காணப்படுகின்றது.

ஏனெனில் தற்போது மக்களிடம் பணம் இல்லை பணம் இருந்தாலும் அவர்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்கவே யோசிப்பார்கள். முன்னரை போல புதிதாக வரும் உடுபுடவைகளை வாங்கி உடுத்துவதற்கு பொதுமக்களிடம் பணம் இல்லை. மீறி கொள்வனவு செய்பவர்களும் அவர்களின் ரசனைக்கு ஏற்றவாறு கொள்வனவு செய்ய முடியாதுள்ளனர்.

யாழ்ப்பாண நகரில் உள்ள புடவை கடைக்காரர்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் தற்போதுள்ள நிலையில் பலர் மின்சார கட்டணங்களை கட்டாது தொலைபேசி கட்டணங்களை கட்டாது தொழிலை நடத்திச் செல்லக்கூடிய நிலை காணப்படுகின்றது. அத்துடன், வங்கி கடன்கள் மற்றும் தவணை அடிப்படையிலான கடன்களுக்கும் நாங்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே இந்த நிலையானது எப்போது மாற்றம் பெறும் என்று தான் எதிர் பார்க்கின்றோம்.

யாழ்ப்பாண வர்த்தகர்களை பொறுத்தவரை கடந்த இரண்டு வருடங்களாக எமக்கு புடவை வியாபாரம் மிகவும் மந்த நிலையில் காணப்படுகின்றது. அதாவது கொரோனா தொற்று காரணமாக கொரோனா இடர் காலத்தில் நாட்டில் முடக்க நிலை காணப்பட்டதன் காரணமாக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக புடவை மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கான அனுமதி அக்காலத்தில் நிறுத்தப்பட்டதன் காரணமாக எமக்குரிய வியாபாரங்கள் இடம்பெறவில்லை - கடைகள் திறக்கப்படவில்லை. அதனால் நமது புடவை வியாபாரிகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக துன்பப்பட வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

ஈழநாடு

# வெளியீட்டின் முன்பே வசூல்




வம்சி பைடிப்பள்ளி இயக்கத்தில் விஜய் நடித்து வரும் படம் வாரிசு. இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் நேரடியாக வெளியாக உள்ளது. இதில் விஜய்க்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா நடித்து வருகிறார்.

மேலும், பிரகாஷ்ராஜ், சரத் குமார், குஷ்பூ, ஷாம், யோகி பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடை பெற்று வருகின்றன. "வாரிசு" படத்தின் முதல் பாடல் தீபாவளி அன்று வெளி யாகும் என கூறப்படுகிறது.

தைப்பொங்கலுக்கு வெளியாகும் இந்தப் படம் வெளியாகும் முன்பே, 180 கோடி இந்திய ரூபாய் வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் தொலைக்காட்சி உரிமம், ஓடிடி உரிமம், பாடல்களுக்கான உரிமம், வெளிநாட்டு வெளியீட்டு உரிமம் என 180 கோடி ரூபாய்க்கு வியாபரம் நடந்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# விஜயுடன் மீண்டும் ஜீவா



வாரிசு படத்தை தொடர்ந்து லோகேஷ் கனகராஜின் படத்தில் நடிக்கவுள்ளார் விஜய். இதன் பின்னர், சுப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் 100ஆவது படத்தில் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தப் படத்தில் நடிகர் ஜீவாவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# 5 மொழிகளில் சமந்தா

நடிகை சமந்தா நடிப்பில் தற்போது "யசோதா" என்ற இந்தியளவிலான திரைப்படம் தயாராகி வருகிறது. இந்த திரைப்படத்தை இயக்குநர்கள் ஹரி-ஹரிஷ் இயக்குகிறார்கள். வரலட்சுமி சரத்குமார், உன்னி முகுந்தன், ராவ் ரமேஷ், முரளி சர்மா உள்ளிட்ட பலர் இந்த திரைப்படத்தில் நடித்துள்ளனர்.

திரில்லர் வகை கதையம்சம் கொண்ட இந்த திரைப்படத்தில் சமந்தா எழுத்தாளர் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்த படத்தின் டீசர் ஐந்து மொழிகளில் வெளியாகி சமூக வலைதளத்தில் பிரபலமாகி வருகிறது.

# கதாபாத்திரங்களான நடிகர்கள்!





கல்கியின் நாவலை தழுவி இயக்குனர் மணிரத்னம் இயக்கியுள்ள "பொன்னியின் செல்வன்" திரைப்படம் வரும் 30ஆம் திகதி வெளியாகிறது.

இதனிடையே ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பொன்னியின் செல்வன் திரைப் படத்தின் 6 பாடல்களும் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளன.

இந்த நிலையில் நடிகை த்ரிஷா, ருவிட்டர் பக்கத்தில் தனது பெயரை "குந்தவை" என மாற்றி இருந்தார். பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் நடிகை திரிஷா, சோழ மன்னர் இராஜராஜ சோழனின் மூத்த சகோதரியான குந்தவையின் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில் த்ரிஷாவை தொடர்ந்து நடிகர் விக்ரம் தனது ருவிட்டர் கணக்கில் "ஆதித்த கரிகாலன்" என பெயர் மாற்றம் செய்துள்ளார். பொன்னியின் செல்வன் படத்தில் நடிகர் விக்ரம் ஆதித்த கரிகாலன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.




**திரைப்படம் - வெந்து தணிந்தது காடு**
**இயக்கம் - கௌதம் வாசுதேவ் மேனன்**
**இசை - ஏஆர் ரகுமான்**
**நடிப்பு - சிம்பு, சித்தி இட்னானி**

"ரௌடிசம், தாதா, காங்ஸ்ரர்" வகைப் படங்களுக்கு தமிழ் திரையுலகில் முன்னுதாரணமாக இருக்கும் படம் 30 வருடங்களுக்கு முன்பு வெளிவந்த "நாயகன". அது ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைப் படமாக ஒரு வாழ்வியலை சொன்ன படமாக அமைந்தது. அதற்கடுத்து வந்த "பாட்ஷா" படம் ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைப் படமாக வர்த்தக ரீதியான அதிரடிப் படமாக அமைந்தது.

அந்தப் படங்களின் பாதிப்பு இல்லாமல் அதற்கடுத்து வந்த எந்த ஒரு "காங்ஸ்டர்" திரைப்படமும் வந்ததில்லை. ஏன், சமீபத்தில் வந்து பெரிய வரவேற்பை பெற்ற கன்னடப் படமான "கே. ஜி. எவ் 2" கூட அதில் அடக்கம்தான். இந்த "வெந்து தணிந்தது காடு" படம் கூட அப்படிப்பட்ட ஒரு படம்தான். ஆனால், கௌதம் வாசுதேவ் மேனன் பாணிப் படம்.

தென் தமிழ்நாடு பக்கம் இருந்து பிழைப்பைத் தேடி மும்பை சென்று அங்கு ஒரு தாதாவாக வளரும் வரையில் "முத்து" என்ற ஓர் இளைஞனின் வாழ்வியல் வர்த்தக அதிரடிப் படம்தான் இது. முதல் பாதி வரை ஊரிலிருந்து புறப்பட்டு மும்பை சென்று பரோட்டா கடையில் வேலைக்குச் சேர்ந்த முத்துவின் வாழ்வியலை அழுத்தமாகப் பதிய வைத்திருக்கிறார் இயக்குநர். இரண்டாம் பாதியில் ஒரு ரௌடி குழு தலைவனுக்கு மெய்ப்பாதுகாவலராக வளர்ந்து நிற்கும் அதே முத்துவின் அதிரடியை சரா சரியாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் கௌதம்.

முத்து என்ற முத்துவீரன் ஆக மாறுபட்ட தோற்றத்தில் சிம்பு. ஊர்ப் பையனாக ஓர் ஏழை இளைஞனாக அதற்கான உடல் மொழி, நடை, உடை, பாவனை என தன்னை முழுவதுமாக மாற்றிக் கொண்டுள்ளார் சிம்பு. இதற்கு முன்பு சிம்பு இப்படியெல்லாம் நடித்ததில்லையே என ஆச்சரியப்பட வைக்கிறார். ஓரிடத்தில்கூட சிம்புவின் முந்தைய படங்களின் நடிப்பு, கதாபாத்திரம் மனதில் வரவில்லை. முத்து என்ற ஒரு தென் தமிழ்நாடு இளைஞனை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார். நெல்லைத் தமிழ்ப் பேச்சு, தாங்கித் தாங்கி நடப்பது போல ஒரு நடை, அடிக்கடி இடது கையால் முகத்தைத் துடைப்பது, சேர்ட்டின் கொலரில் முகத்தைத் துடைப்பது என நிறையவே கதாபாத்திரத்தை உள் வாங்கியிருக்கிறார். இடைவேளைக்குப் பின் அப்படியே முழுமையான மாற்றம். ஒரு ரௌடிக்கு அடியாள், மெய்பாதுகாவலர் என பல படங்களில் பார்த்த கதாபாத்திரம் என்றாலும் அதிலும் தனித்துத் தெரிகிறார் சிம்பு. இரண்டாம் பாகத்தில் என்ன அதிரடி செய்யப் போகிறார் என அவரின் ரசிகர்கள் ஆர்வத்துடன் இருப்பதைத் திரையரங்கில் புரிந்து கொள்ள முடிகிறது.

மும்பையில் அடிதடி, கட்டப் பஞ்சாயத்து என ரௌடிச வேலைகளைச் செய்பவர்களுக்கு நடக்கும் போட்டிதான் படத்தின் மையக்கரு. ஒரு கூட்டம் தமிழர்கள், மற்றொரு கூட்டம் மலையாளிகள். அதில் தமிழர்கள் கூட்டத்துக்காக வேலை செய்பவராக மாறுகிறார் சிம்பு. அந்தக் கூட்டத்தின் தலைவனாக நடித்திருப்பவர் புதுநடிகர் சரா. புதுமுகம் என்று சொல்ல முடியாதபடி நடித்திருக்கிறார். மலையாளிகள் கூட்டத்தின் தலைவனாக சித்திக். இவரும் மிரள வைக்கிறார்.

சிம்புவின் காதலியாக சித்தி இத்னானி. இவருக்கும் இடையில் அதிகமான காதல் காட்சிகள் இல்லையென்றாலும் அந்த ஒரு சில காட்சிகளிலேயே காதலை அழுத்தமாக வெளிப்படுத்தும் காட்சிகளாக அமைந்துள்ளன. சித்தியின் நடிப்பும் சிறப்புதான். புதுமுகம் என்று சொல்ல முடியாத நடிப்பு.

அப்புக்குட்டி, நீரஜ் மாதவ், ராதிகா சரத்குமார் இவர்களுக்கான வாய்ப்புகள் குறைவுதான் என்றாலும் அவர்கள் கதாபாத்திரங்களைப் பற்றி பேச வைக்கிறார்கள்.

"மறக்குமா நெஞ்சம்..., மல்லிப்பூ..." ஆகிய மறக்க முடியாத பாடல்களைப் பதிவு செய்துள்ளார் ஏ. ஆர். ரகுமான். பின்னணி இசையிலும் வேறு ஓர் உலகத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். சித்தார்த்தா நுனியின் ஒளிப்பதிவு மும்பையை புதிதாகக் காட்டுகிறது. ரஜீவனின் தயாரிப்பு வடிவம் படத்துக்கு மிக முக்கியமானது. உத்தரா மேனனின் உடை வடிவமைப்பு சிம்புவை மாற்றியதில் பெரும் பங்கு வகிக்கிறது.

இடைவேளைக் காட்சிக்கு திரையரங்கில் அப்படி ஒரு கைத்தட்டல். அது போல் மேலும் சில காட்சிகள் புதிதாக அமைந்து இரசிக்க வைக்கிறது. சில காட்சிகள் இப்படித்தான் அடுத்து நகரும் என ஊகிக்க முடிவது மைனஸ். இதற்கு முன்பு பல படங்களில் பார்த்த சம்பவங்கள் இதிலும் இடம்பெற்றுள்ளன. ஆனாலும், கௌதம் மேனனின் உருவாக்கப் பாணியும், சிம்புவின் நடிப்பும் படத்தைக் காப்பாற்றுகிறது. சிம்பு ரசிகர்களுக்கு படம் அதிகம் பிடிக்கலாம். மற்ற ரசிகர்களுக்கு வழக்கமான ஒரு காங்ஸ்டர் படமாகப் பிடிக்கலாம். இரண்டாம் பாகத்தில் "கே. ஜி. எவ்" சாயல் நிறைய வருமோ என கொஞ்சம் அதிர்ச்சியாக உள்ளது.

# தொடக்கப் புள்ளி!




வெயிலைத் தாங்கிய விறகாக இளம் வீரர்களை கொண்ட இலங்கை, வீழ்ச்சிகளால் பலமற்று – இனி திரும்ப வராது என்று நினைத்தபோது, கணிப்புகளைப் பொய்யாக்கி ஆசிய சம்பியன் ஆகியிருக்கிறது. பல கடின சூழல்களைக் கடந்தும், இளம் படையின் எழுச்சியால் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது இலங்கை அணி.

இருபது – 20 போட்டி என்றாலே துடுப்பாட்ட வீரர்களின் சொர்க்கபுரியாகவும் பந்துவீச்சாளர்களின் மரணப் படுக்கையாகவுமே கருத்தில் கொள்ளப்படும். ஆனால், இந்த ஆசியத் தொடர் முழுவதிலும் பல சந்தர்ப்பங்களில் பந்துவீச்சாளர்கள் தங்கள் அசாத்திய திறமைகளால் துடுப்பாட்ட வீரர்களுக்கு போட்டியை கடினமாக்கினர். அதிலும் நசீம் ஷா, ஹரீஸ் ரவூப் இணைந்து மிரட்டும் பாகிஸ்தானின் பவர்பிளே ஓவர்கள் ஒவ்வொன்றும் அவ்வகைப்பட்டவைதான்.

இறுதிப் போட்டியிலும் பாகிஸ்தானின் தொடக்கம் அப்படித்தான் இருந்தது. பொதுவாகவே மணிக்கு 140+ கிமீ வேகத்தில் பந்துவீசி மிரட்டுபவர்கள், இப்போட்டியில் 150இற்கும் அதிகமான வேகத்தோடு பந்தை ஏவுகணையாக்கி அனுப்பினர். அந்த வேகத்திலும் பந்தை ஸ்விங்கும் செய்ய வைத்தது ஈட்டியில் விஷம் தோய்த்து அனுப்பியதைப் போல் இலங்கை துடுப்பாட்ட வீரர்களின் நிலைமையைக் கவலைக்கிடமாக்கின.

இவ்வாறு வீசப்பட்ட பந்துகளால் தடுமாறிய இலங்கை அணி முதல் 9 ஓவர்களுக்குள்ளாகவே ஐந்து துடுப்பாட்ட வீரர்களை பெவிலியனுக்குள் புகலிடம் தேடியிருந்தனர். 62ஃ5 என இலங்கை சற்று தத்தளிக்கவே செய்தது. ஆனால், அங்கிருந்து சம்பியன் அணிக்குரிய சகல இலட்சணத்தோடு இலங்கை கப்பல் மீண்டெழுந்தது. அணித் தலைவ் சானக வெளியேறினாலும் அதனைக் கவிழாமல் காப்பாற்றியது பானுக ராஜபக்ஷ, ஹசரங்கவுடனும் பின் இறுதி ஓவர்களில் கருணரத்னவுடனும் அமைத்துக் கொண்ட இரு இணைப்பாட்டங்கள். பாதிக் கூடாரமே காலியாகினும் இவர்கள்தான் இழந்த நம்பிக்கையை மீட்டனர்.

போட்டி கிட்டத்தட்டப் பாகிஸ்தானின் பக்கம் சாய்ந்திருந்த போதிலும் பானுகவின் அதிரடிதான் இலங்கையை ஆட்டத்துக்குள் திரும்பக் கொண்டு வந்தது.

இறுதி ஓவர்களில் இன்னமும் வெறிகொண்டு ரன்ரேட்டை முடுக்க முன்னேறிக் கொண்டிருந்த பானுக – ஹசரங்க கூட்டணியை இடையில் தரப்பட்ட ரவூபின் ஓவர் முறித்தது திருப்புமுனையாக எண்ணப்பட்டது. எனினும், அதன் பின்னும் இறுதி 4 ஓவர்களில் பாகிஸ்தானின் இறுதிப் பந்துவீச்சை அடித்து நொறுக்கி, 50 ஓட்டங்களை இணைப்பாட்டத்தில் சேர்த்தது பானுக – கருணரத்ன கூட்டணி.

இறுதியில் 170 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. இந்த இலக்கு போதுமானதா என்பது பற்றியெல்லாம் யோசிக்கக்கூடவிடாமல் செய்துவிட்டது இலங்கையின் மீளெழுகை. மறுபுறம் பாகிஸ்தானோ இனிங்ஸின் முதல் பாதியில் பந்துவீச்சு களத்தடுப்பு என அத்தனையிலும் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாவது பாதியிலோ இரண்டிலுமே சோபிக்கத் தவறியது. ஆக, துரத்தல் சுலபம் என்பதால் பாகிஸ்தானின் கை ஓங்குமென்றாலும், இறுதிப் போட்டியின் அழுத்தம், போட்டியின் முடிவை எப்படியும் மாற்றலாம் என்பது இலங்கைக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது.

நாணயச் சுழற்சியை வென்றாலே போட்டியை வெல்லலாம் என்ற கனவோடு இருந்த பாகிஸ்தானுக்கு இலங்கையின் பவர்பிளே ஓவர்கள், ஏறக்குறைய வெற்றியை உறுதி செய்திருந்தன.

ஆனால், இருபது – 20 அனுமானத்துக்கு எல்லாம் அப்பாற்பட்டது, பந்துவீச்சாளர்களின் முழுத் திறமையும் வெளிவரும் பட்சத்தில் அது போட்டியை இன்னமும் சுவாரஸ்யமானதாக்கும் என்பதனை இலங்கையின் பந்துவீச்சும் நிரூபித்தது. நாணயச் சுழற்சியில் விழாத பக்கத்தில்கூட நமக்கான வெற்றி ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம். இலங்கை அதனைக் கருத்தில் கொண்டே இரண்டாம் பாதியை அணுகியது.

மதுஷன், புதுப்பந்தில் மட்டுமல்ல, மிடில் ஓவர், டெத் ஓவர் என மூன்று கட்டத்திலும் விக்கெட்களை வீழ்த்தினார். அவரது மெதுவான பந்துகளும் இன்ன பிற வேரியேஷன்களும் பாகிஸ்தானுக்கு நெருக்கடி தந்தன. இந்நிலையில், ஹசரங்க போன்ற திறமையுடைய இருபது – 20 சகலதுறை வீரர், அணிக்கான வரம். இப்போட்டியிலும் அதனை மீண்டும் நிரூபித்தார் ஹசரங்க.

ரிஸ்வான், ஆசிப் அலி, குஸ்தில் ஆகிய மூவரையும் காலி செய்த ஹசரங்கவின் ஓவர்தான் ஆசிய சம்பியனாக இலங்கை முடிசூட்டியது. இறுதி மூன்று ஓவர்களில் சற்றே போராடினாலும் பாகிஸ்தானால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தங்களது ஆறாவது ஆசியக் கோப்பையை இலங்கை ஏந்தியது.

2014ஆம் ஆண்டுக்குப் பிறகு மறுபடியும் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது இலங்கை. முந்தைய எல்லாக் கோப்பைகளையும் விட, இந்தக் கோப்பை மிகவும் சிறப்பானது. ஏனெனில் வீழ்ந்து கிடந்த இலங்கைக்கு மாபெரும் நம்பிக்கையையும் அடுத்தடுத்த தொடர்களுக்கான உத்வேகத்தையும் கொடுக்கும் இந்தக் கிண்ணம் கொடுக்கும்.

இந்த வெற்றி, இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய அத்தியாயத்துக்கான தொடக்கப் புள்ளி. “The Shawshank Redemption” திரைப்படத்தின் அடிப்படை “நம்பிக்கை” என்றால், மீண்டு எழுந்து நிற்கும் “Sri Lankan Cricket Redemption”-ன் அடிநாதமும் அதுவேதான்.

# தலைமகனின் ஓய்வு

*ரென்னிஸ் ரசிகர்களுக்கு இந்த வாரம் வெறுமையால் நிரம்பியிருக்கக்கூடும். காரணம், பெடரரின் ஓய்வு அறிவிப்பு. போராடுவார், காயங்களிலிருந்து மீண்டு வருவார், மீண்டும் வருவார். ஜொக்கோவிச்சுக்கும் நடாலுக்கும் இன்னும் போட்டியளிப்பார் எனும் ரசிகர்களின் ஆசை எல்லாம் பொய்த்திருக்கிறது. ஆயினும், அவரின் நீண்ட நெடிய தொழில் வாழ்வு கொடுத்திருக்கும் நினைவுகளும் பூரிப்புகளும் ஏராளம்.*

*கடந்த கால் நூற்றாண்டுக்குள் ரென்னிஸ் எனும் விளையாட்டை பின்பற்ற தொடங்கியவர்களுக்கு பெடரராலேயே அந்த விளையாட்டின்மீது தீவிரப் பற்று உண்டாகியிருக்கும். வர்ணிப்பதற்கு வார்த்தைகள் தீர்ந்துபோய் வெறும் மலைப்பை மட்டுமே ஏற்படுத்தக்ககூடியது பெடரரின் தொழில் வாழ்வு. அதிலிருந்து சில சாதனைகளும் சில முக்கியமான தருணங்களும் இங்கே...*

*1998 முதல் தொழில்முறை போட்டிகளில் ஆடி வந்த பெடரர் ரென்னிஸ் வாழ்வில் 24 ஆண்டுகளை நிறைவு செய்யும் தருவாயில் ஓய்வை அறிவித்திருக்கிறார்.*

*தான் ஆதர்சமாக பார்த்து வளர்ந்த பீட் சாம்ப்ரஸை 2001 விம்பிள்டன் தொடரின் போட்டி ஒன்றில் 5ஆவது செற் வரை சென்று மிரட்டலாக வீழ்த்தியிருந்தார் பெடரர். அதுவரை ஜாம்பவனான பீட் சாம்ப்ரஸ் விம்பிள்டனை மட்டுமே 7 முறை வென்றிருந்தார். அப்பேற்பட்ட வீரரை 19 வயதே ஆன பெடரர் வீழ்த்தியது ரென்னிஸ் உலகில் ஒரு புதிய அத்தியாயத்துக்கான தொடக்கமாக அமைந்தது.*

*கிராண்ட்ஸ்லம்களில் மட்டும் மொத்தம் 31 இறுதிப்போட்டிகளில் ஆடியிருக்கும் பெடரர் 20 முறை வெற்றிவாகை சூடியிருக்கிறார். முதன்முதலில் 20 கிராண்ட்ஸ்லம்களை வென்ற வீரரும் பெடரரே.*

*விம்பிள்டனின் புல்தரைதான் பெடரருக்கு விருப்பமான களம். விம்பிள்டனை மட்டுமே 8 முறை வென்றிருக்கிறார். 2003 முதல் 2007 வரையில் தொடர்ச்சியாக 5 முறை வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்காமல் விம்பிள்டன் தொடரை வென்றிருந்தார். கடந்த ஆண்டு நடந்த விம்பிள்டனின் காலிறுதி போட்டிதான் பெடரர் ஆடிய கடைசி கிராண்ட்ஸ்லம் போட்டியாகவும் இருந்தது.*

*விம்பிள்டனை போன்றே அமெரிக்க ஓப்பனையும் 2004 முதல் 2008 வரை தொடர்ச்சியாக 5 முறை வென்றிருக்கிறார். இதுபோக அவுஸ்திரேலிய ஓப்பனை 6 முறையும் பிரெஞ்சு ஓப்பனை ஒரே ஒரு முறையும் வென்றிருக்கிறார்.*

*2006, 2007, 2009 இந்த மூன்று ஆண்டுகளிலும் நடைபெற்ற அத்தனை கிராண்ட்ஸ்லம் தொடர்களிலும் இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருந்தார்.*

*மொத்தமாக கிராண்ட்ஸ்லம்களில் மட்டும் 369 ஒற்றையர் ஆட்டங்களை வென்றிருக்கிறார். வேறு எந்த வீரரும் இத்தனை அதிக போட்டிகளை வென்றதில்லை.*

*24 வருட தொழில் வாழ்வில் எல்லாவிதமான போட்டிகளையும் சேர்த்து 1526 போட்டிகளில் ஆடியிருக்கும் பெடரர் 1251 போட்டிகளில் வென்றிருக்கிறார். 2006-07 காலக் கட்டத்தில் தொடர்ச்சியாக 41 போட்டிகளில் தோல்வியையே தழுவாமல் ஆடியிருந்தார்.*

*ரென்னிஸ் கோர்ட்டில் பெடரரின் ஆதிக்கத்தை நிரூபிக்கக்கூடிய புள்ளி விவரம் இது. இதேபோன்று, 2004 முதல் 2008 வரைக்கும் தொடர்ச்சியாக 237 வாரங்களுக்கு தரவரிசையில் முதல்நிலை வீரராகவே இருந்தார். இந்த சாதனையையும் யாராலும் முறியடிக்க முடியவில்லை. 36 வயதில் மீண்டும் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தைப் பிடித்த வயதான வீரர் எனும் பெருமையும் பெடரருடையதே.*



*வலது கையில் ராக்கட்டை பிடித்து ஒரு காலை ஊன்றி ஒரு கையையும் ஒரு காலையையும் காற்றில் பறக்க விட்டு பெடரர் அடிக்கும் சிங்கிள் பேக்ஹாண்ட் ஷொட்கள் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்தமானது. இந்த ஷொட்டை அவர் ஆடும்போது வெளிப்படும் நளினமும் அழகுமே பலரையும் பெடரரின் ரசிகர் ஆக்கியது.*

*ரென்னிஸ் கோர்ட்டுக்கு வெளியேயும்கூட பெடரரின் நற்சுபாவங்களுக்கென்று தனி ரசிகர்கள் உண்டு. பந்தைப் பொறுக்கிக் கொடுக்கும் சிறுவர்கள் முதல் எதிர்த்து ஆடும் வீரர்கள் வரைக்கும் எல்லோரிடமும் நட்பு பாராட்டும் அவரின் சுபாவத்திற்கு சான்றுதான் நடால் வெளியிட்டிருக்கும் அறிக்கை.*

*ஓய்வு அறிவிப்புப் பற்றி பெடரர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்* “Finally, to the game of tennis: I love you and will never leave you ” *என கூறியிருக்கிறார். அதையேத்தான் பெடரர் ரசிகர்களும் கூறுகிறார்கள்.* “Love you Federer and will never leave from you!”

# சைபர் வலையிலிருந்து சிறாரை மீட்பது எப்படி?

- ஹரிஹரசுதன் தங்கவேலு

பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அனைவரையும் இழுத்துப் பிடித்து இணைத்து வைத்திருக்கும் தொழில்நுட்பம், இணையம். கணினியும் இணையமும் சர்வ நிச்சயமாகக் கற்றே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் இன்றைய சிறார். கல்வி, கலை விளையாட்டு, தனித்திறன் வளர்ப்பு என எல்லா வகைகளிலும் அவர்களுக்கு உதவும் இணையத்தில் சில பேராபத்துகளையும் அவர்கள் கடந்து வரத்தான் வேண்டியிருக்கிறது.

ஆம், சைபர் குற்றவாளிகள் சிறாரைக்கூட விடுவதில்லை. அவர்களை இணையத்தில் பின்தொடர்ந்து, அவர்களை அச்சுறுத்தி உளவியல் மற்றும் உடல்ரீதியாக மிகப் பெரும் தாக்குதலை நடத்துகிறார்கள்.



**சிறார் மீதான சைபர் குற்றங்கள் அதிகரிக்க காரணம் என்ன?**

மிக நிச்சயமாக இணையப் பயன்பாடும், ஸ்மார்ட் சாதனங்களின் உபயோகமும்தான் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பிள்ளைகள் என்று வந்துவிட்டால் செலவழிக்க நாம் தயங்குவதில்லை. கடந்த இரு வருடங்களில் ஆன்லைன் கல்வி, அதற்கேற்ப தொடர்ந்த அதிவேக இணையம், பெரிய திரை கொண்ட கணினி அல்லது கைபேசி எனச் சமூகத்தில் அனைத்து வர்க்கமும் அவர்களால் முடிந்த வசதிக்கு இதை உறுதிசெய்தார்கள். அதன் இலவச இணைப்பாக குற்றங்களும் அதிகரிக்க தொடங்கியுள்ளன.

சிறார் டிஜிட்டல் விளையாட்டுகளைக்கூட தனிநபராக விளையாடாமல் ஆன்லைனில் குழுவாக இணைந்து விளையாடுகிறார்கள். புதிய நண்பர்கள், அவர்களிடமிருந்து வரும் இன்பாக்ஸ் செய்திகள் அவர்களுக்கு ஓர் ஆர்வத்தை உருவாக்குகிறது. தங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை அறியாதோரிடம் பகிரத் துவங்குகிறார்கள். இதன் விளைவே சைபர் சிக்கல்களில் மாட்டிக்கொள்வது.

**சைபர் கிரிமினல்கள் எப்படி சிறார்களை அணுகுகிறார்கள்?**

சிறாரை அணுகுவதற்கு சைபர் கிரிமினல்கள் அதிகம் தேர்ந்தெடுப்பது சமூக வலைதளங்களைத்தான். தேடுதல் வசதியைப் பயன்படுத்தி, ஸ்பைடர்மேன், டோரா, பிரின்சஸ் எனச் சிறாரின் பயனர் பெயர் மற்றும் வயதை யூகித்துத் தேடுவர். பிறகு அவர்களைப் போலவே தங்களையும் சிறார் எனக் காட்டிக்கொண்டு செய்திகள் அனுப்புவர். உனக்குப் பிடித்ததுதான் எனக்கும் பிடிக்கும் என ஒருமித்த ரசனையை உருவாக்குவர். நாம் நண்பர்களாக இருக்கலாமா எனக் கேள்வி எழுப்பி நம்பிக்கையைப் பெறுவார்கள்.

சமூக வலைதளங்களுக்கு அடுத்தகட்டமாக, ஆன்லைன் விளையாட்டுகளில் இணைந்து விளையாடும் குழுக்களில், சில சமயங்களில் எல்லோருக்கும் பகிரப்படும் பள்ளி ஆன்லைன் வகுப்பின் இணைப்புகளைப் பயன்படுத்தியும் இவர்கள் சிறாரை அணுகிறார்கள்.

குழந்தையின் நட்பைப் பெற்ற பிறகு அவர்களது பெற்றோர், குடும்ப சூழ்நிலை குறித்த தனிப்பட்ட தகவல்களைப் பெறுவர். அவற்றைக் கொண்டு குழந்தைகளை மிரட்டத் துவங்கி, பாலியல்ரீதியாக அவர்களைத் துன்புறுத்துவது, மிரட்டிப் பணம் பறிப்பது, அவர்களது உடலைப் புகைப்படமாக எடுத்துத் தரச் சொல்வது, உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சவால்களில் ஈடுபடச் சொல் வது என அச்சுறுத்தல்களை நிகழ்த்துவர்.

**தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?**

பெற்றோர் மிக நிச்சயமாக குழந்தைகளின் இணைய உலகைக் கண்காணிக்க வேண்டும். தேவையில்லாதபட்சத்தில் ஆன்லைனில் அதிக நேரம் செலவிட அனுமதிக்கக் கூடாது. அவர்களுக்கு வரும் குறுஞ்செய்திகள், புகைப்படங்கள், மின்னஞ்சல்களை ஒரு நண்பனைப் போல அருகில் இருந்து கவனிக்க வேண்டும்.

எப்போதும் இல்லாமல் திடீரென அவர்கள் அமைதியாக இருப்பது, பயம் கொள்வது, உறக்கமின்மை போன்றவை இருக்கிறதா எனக் கவனிக்க வேண்டும். அறியாதவர்களிடமிருந்து பரிசுப் பொருட்கள் அவர்களுக்கு வருகிறதா, புதிய நபரிடம் ரகசிய வார்த்தைகளில் பேசிக் கொள்கிறார்களா எனக் கண்காணிக்க வேண்டும்.

யார் கேட்பினும் உனது உடலைப் புகைப்படம் எடுக்கக் கூடாது, அது தவறு என அறிவுறுத்த வேண்டும். குடும்பத்தினரின் இதர புகைப்படங்களையும் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும். சைபர் குற்றங்கள் அவை தொடர்பான சமூக நிகழ்வுகளை அவர்களிடத்தே பேச வேண்டும். சமூக வலைதளங்களில் எது செய்யலாம், எது கூடாது என்ற விழிப்புணர்வைப் பள்ளியில் இருந்தே அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

மிக முக்கியமாக எது நிகழ்ந்தாலும் அதைத் தனது பெற்றோரிடம் மறைக்காமல் சொல்லும் நம்பிக்கையைப் பெற வேண்டும். ஒருவேளை, உங்கள் பிள்ளைக்கு சைபர் அச்சுறுத்தல்கள் நிகழ்வது தெரிந்தால் சிறிதும் தாமதிக்காமல் காவல் துறையை அணுக வேண்டும்.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**பிரான்சீஸ் நிரோசன், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**
ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள ஐநா மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் இம்முறையும் சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்திருக்கின்றனவே. மனித உரிமைகள் விடயத்திலும் நல்லிணக்கத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை காண்பித்திருப்பதாக அவை கூறியிருக்கின்றனவே. அப்படி ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதா?

**வியுக்தியார்:**
அட நீங்கள் வேற. ரணில் ஆட்சிக்கு வந்தவிட்டார். மேற்குலகின் தாராளவாதியான அவர் ஆட்சிக்கு வந்துவிட்டார் என்று மேற்குலகு நினைத்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கைதான் அது. அவரும் எங்கட ஆள்தான் என்று சொல்லிவைக்க முயல்கின்றனர் போலும். சீனா விரும்பிய ஆளைக் கொண்டுவர முடியவில்லை என்றாலும் இருப்பது அவர்களது ஆட்சிதான் என்று சொல்லாமல் சொல்கிறார்கள் அவ்வளவுதான்.

**எஸ். கார்த்திகேசு, அக்கரைப்பற்று.**

**கேள்வி:**
மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில், அந்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின்கீழ் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளாரே. அவரும் கூட சர்வதேச விசாரணையைத் தானே வலியுறுத்துகின்றார். அது நடக்கும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:**
அவர் தனது கோரிக்கையாக- பரிந்துரையாக அதனை வைத்திருக்கின்றாரே தவிர அதுவே பேரவையின் தீர்மானம் அல்லவே. அவர் அப்படியொரு தீர்மானத்தை பேரவை உறுப்பு நாடுகள் எடுக்க வேண்டும் என்றுதான் கோரியிருக்கிறார். ஆனால் வரவிருக்கின்ற தீர்மானமோ, உள்நாட்டிலேயே விசாரணையை வலியுறுத்துவதாகத்தானே தெரிகின்றது. அவருடைய கோரிக்கையையே உறுப்பு நாடுகள் எற்றுக்கொள்ளாதபோது, நமது தலைவர்கள் என்று சிலர் அங்கு போய் கேட்பதையா உறுப்பு நாடுகள் கேட்கப்போகின்றன.?

**ஆர். கேசவராஜன், எமில்நகர், மன்னார்.**

**கேள்வி:**
வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை பெற்றுத்தருமாறு வழியுறுத்தி, தொடர்ச்சியாக நூறு நாட்கள் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை நடாத்தி வருகின்றார்களே. கௌரவமான தீர்வு என்றால் என்ன என்று விளக்கமாக சொல்லவேண்டாமா?

**வியுக்தியார்:**
போராட்டம் என்பது எப்படியிருக்கவேண்டும் என்பதுக்கு முதலில் நாம் தீர்வுகாணவேண்டும். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, மக்கள் வீதிக்கு வந்தார்களே. அது ஏன்? அந்த நெருக்கடி தங்களைப் பாதித்தபோது, அந்தப் பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக அவர்கள் ஒன்றுதிரண்டார்கள். ஆனால் நாமோ, நமக்குத் தேவையான தீர்வு என்ன என்பதிலோ, அல்லது அதனை பெற்றுத்தருவதாக கூறிக்கொண்டிருப்பவர்கள் அதற்காக எதையும் செய்யவில்லை என்பதிலோ அக்கறை இல்லாமல்தானே எழுபது வருடமாக காலம் கடத்திக் கொண்டிருக்கின்றோம். இப்படியொரு போராட்டம் நடக்கின்றது என்று நீங்களாவது அறிந்திருக்கின்றீர்கள். ஆனால் நமது தலைவர்கள் என்று சொல்பவர்களுக்கு தெரியுமோ என்பது கூட சந்தேகம்தான்.

**ரவிந்திரன் குகராஜா, மாமாங்கம், மட்டக்களப்பு**

**கேள்வி:**
கடந்த இருபது மாதங்களில் பத்து லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்று குடியகல்வு குடிவரவு கட்டுப்பாட்டாளர் தெரிவித்திருக்கின்றாரே. இப்படியே போனால் நாட்டில் யார் மிஞ்சப்போகின்றார்கள்?

**வியுக்தியார்:**
பத்துலட்சம் புலம்பெயர் தமிழர்கள் வெளிநாடுகளில் இருந்துகொண்டு, முழு இலங்கையின் கடன்களையும் தாமே அடைக்கின்றோம் என்று பேரம் பேசுவதைப்பார்த்துவிட்டு தெற்கிலும் இப்போது சிங்களவர்கள் புலம்பெயரத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் தான் இனி தெற்கின் அரசியலையும் வழிநடத்தப்போகின்றார்களோ என்னவோ? ஆனால் நாட்டில் மிஞ்சப்போவது என்னையும் உங்களையும்போன்ற அடிமட்ட மக்கள் தான்.



# துறப்பு

-இளங்கோவன் முத்தையா

(சென்றவாரத் தொடர்ச்சி...)

காத்திருப்பு அறை திடீர் பரபரப்புக்கு உள்ளாகியி ருந்தது. உள்ளிருந்து வெள்ளை கோட், கழுத்தில் ஸ்டெத் தாஸ்கோப் அணிந்த ஒரு இளம் வயது பெண் மருத்து வரும், அதே வயது ஆண் மருத்துவரும் வெளியே வேக மாக ஓடி வந்தார்கள். அவர்களுக்குப் பின்னே காயத்தைத் துடைத்த செவிலி ஓடி வந்தாள். சுடிதார்ப் பெண்ணைக் கவனித்தேன். நாற்காலியின் முதுகில் தலையை நன்கு சாய்த்திருந்தாள். கை, கால்கள் துவண்டிருந்தன.

"அன்கான்ஷியஸ் ஆகிட்டாங்க போல, ஸ்ட்ரெச்சர் எடுத்துட்டு வாங்க, போங்க" என்று ஒரு செவிலியை விரட்டிவிட்டு, சுடிதார்ப் பெண்ணின் கன்னத்தை மெது வாகத் தட்டி, "மேடம்.. மேடம்" என்று அழைத்தாள் அந்த இளம் பெண் மருத்துவர். அனேகமாகப் பயிற்சி மருத்துவராக இருக்கக்கூடும் என்று தோன்றியது. பிறகு சுடிதார்ப் பெண்ணின் கண் இமைகளைப் பிரித்துக் கூர்ந்து பார்த்தாள். "கூட யார் வந்திருக்காங்க?" என்று கேட்டவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "ஆக்ஸிடண்ட் கேஸா, ஏஆர் எண்ட்ரி போட்டீங்களா, இல்லியா?" என்றாள். "உள்ள வரும்போது அவுங்களா நடந்துதான் மேடம் வந்தாங்க, இவ்ளோ நேரம் நல்லாத்தான் இருந்தாங்க, ஓபிலையே அனுப்பற மாதிரித்தான் இருந்துச்சு இந்தப் பொண்ணு" என்றாள் செவிலி.

"மேம் பின்னந்தலை-" என்றபடியே செவிலி சுடி தார்ப் பெண்ணின் தலையைத் திருப்பினாள். அவரது காது மடல்களின் பின்புறம் ரத்தம் மசமசவென்று தலை முடியோடு ஒட்டிப் பிசின்போல இருந்ததைப் பார்த்தேன்.

"மை காட்" என்றபடி கூட இருந்த ஆண் மருத்து வரிடம், "ஸ்ட்ரெச்சர் சொல்லு அருண்" என்று சொல்லி விட்டு, "ரவி சாருக்கு இன்ஃபார்ம் பண்ணு போ, எக்ஸ்ரே, ஸ்கேனுக்கு அவர்தான் எழுதணும்" என்றாள் வெள்ளை கோட் அணிந்த டாக்டர் பெண்.

பிறகு செவிலியர்கள் பக்கம் திரும்பி, "பேஷண்ட் பேர் என்ன?" என்றாள். "கேக்கறதுக்குள்ள அன்கான்ஷியஸ் ஆகிட்டாங்க மேடம்."

"ப்ச்ச்.. எதையுமே ஒழுங்கா செய்ய மாட்டீங்களா?" என்றாள். பிறகு "அருண்" என்று விளித்துவிட்டு, "போய்ட் டானா, இவன் ஒருத்தன் அவசரக் குடுக்கை" என்றபடி சுடிதார்ப் பெண்ணின் மணிக்கட்டைப் பிடித்து நாடித் துடிப்பைக் கவனித்தாள், கண் இமைகளைத் திறந்து பார்த்தாள். நெற்றியில் துளிர்த்த வியர்வையைப் புறங்கை யால் துடைத்துக்கொண்டாள். பிறகு, "ப்ச்ச்.. கௌம்பர நேரத்துல..." என்றாள். ஒரு முறை அனிச்சையாகத் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள்.

நான் என் பக்கத்தில் அமர்ந்திருந்த அஜய் என்றழைக் கப்பட்ட அந்தச் சிறுவனின் பக்கம் திரும்பிப் பார்த்தேன். அவனொரு சாமுராயாக மாறி, வாளால் பேய்களை வெட்டிக்கொண்டிருந்தான். விதவிதமான பேய்கள், வௌவால்கள் ரத்தம் சிதற வீழ்ந்துகொண்டிருந்தன.

"தம்பி, உங்க அம்மா பேர் என்ன?" என்று கேட்டேன். பார்வையை மொபைலிலிருந்து எடுக்காமலேயே தலையை மட்டும் மறுப்பாக ஆட்டினான் அவன். எனது கேள்வியை அவன் உள்வாங்கிக்கொண்டதாகவே தெரிய வில்லை. நான் அவனது மொபைல் போன் திரையை உள்ளங்கையால் மறைத்து, "உங்க அம்மா பேரு என்னடா?" என்று மிரட்டும் தொனியில் கேட்டேன்.

சட்டென்று எழுந்தவன், என்னைப் பார்த்து முறைத்து விட்டு இரண்டு நாற்காலிகள் நகர்ந்து போய் உட்கார்ந்து கொண்டான். நானும் எழுந்து அவன் பக்கம் அமர்ந்து மீண்டும் அவன் மொபைல் திரையை மறைத்தேன். "அய்யோ.. கைய எடுறா" என்றான். அவன் என்னை ஒருமையில் அழைத்ததால் சட்டென்று எரிச்சலானேன். அவனுக்கு ஒரு அறை கொடுக்க வேண்டுமெனத் தோன் றியது. அதே நேரத்தில் அவன் வைத்திருந்த மொபைல் போன் ஒலித்தது. "ப்ச்ச்.." என்றவன் அந்த அழைப்பை, நொடி நேரத்தில் துண்டித்துவிட்டு விளையாட்டைத் தொடர்ந்தான். நான் அவனது மொபைல் போனைப் பிடுங்கி வைத்துக்கொண்டு, "அம்மா பேரைச் சொல்லு.. மொபைல் தர்றேன்" என்றேன். அவன் எனக்குப் பதில் சொல்லாமல் நாற்காலியிலிருந்து இறங்கி, இன்னொரு நாற்காலியில் ஏறி நின்று குதித்தான். நான் அந்த மொபை லைப் பார்த்தேன். லாக் ஆகி இருந்தது. அவனிடம், "இந்த லாக்க எடுத்துக்கொடு" என்றேன். எனக்குப் பதிலளிக் காமல் ஒரு நாற்காலியிலிருந்து இன்னொரு நாற்காலி மேல் நடந்து சென்று அதிலிருந்து கீழே குதித்தான்.

நான் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பெண்ணை ஸ்ட்ரெச்சரில் வைத்து உள்ளே கொண்டு சென்றுகொண் டிருந்தார்கள், அவர்களுக்கு முன்னே அந்த இளம் பெண் மருத்துவரும், பின்னே செவிலியர்களும் போனார்கள். நான் அந்தச் சிறுவனைப் பற்றிச் சொல்வதற்காக "ஹலோ மேடம்" என்று அழைத்தேன். யாரும் திரும்பிப் பார்க்க வில்லை. அறையிலிருந்த மற்றவர்கள் தங்களது ஸோம்பி வேடத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தார்கள்.

நான் நேரம் பார்த்தேன். வந்து அரை மணி நேரம் கடந் திருந்தது. அலுவலகத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மட்டும்தான் அனுமதி வாங்கியிருந்தேன். மதியம் ஒரு முக்கியமான மீட்டிங் இருந்தது. அதற்கு அலுவலகத்திற் குப் போய்த் தயாராக வேண்டியதிருந்தது. "லேட்டா குமா?" என்று என் மனைவிக்கு வாட்ஸப் செய்தேன்.

சற்று நேரம் கழித்து, "டென் மினிட்ஸ்" என்று பதில் வந்தது. நான் சலிப்புற்று மொபைல் திரையை அணைத்து வைத்து, திரும்பி அவன் பக்கம் பார்த்தேன், ரொம்ப நிதானமாக ஒவ்வொரு நாற்காலியாக ஏறிக்குதிக்கும் வேலையைச் செய்துகொண்டிருந்தான். அவனது மொபைல் என் கையில் இருந்தது எனக்கே அபத்தமாக இருந்தது. சுடிதார்ப் பெண்ணின் கைப்பை அவள் அமர்ந் திருந்த நாற்காலி அருகே கவனிப்பாரற்று தரையில் விழுந்து கிடந்தது. நான் எழுந்து போய் அதை எடுத்து அவனருகே போய் மொபைல் போனை அவனிடம் கொடுத்தேன். அவன் சுடிதார்ப் பெண்ணிடம் செய்தது போலவே என்னிடமிருந்தும் அதை வெடுக்கென்று பிடுங்கினான். பிறகு ஒரு நாற்காலியைத் தேடி, அதில மர்ந்து இன்னொரு விளையாட்டைத் திறந்து விளையாட ஆரம்பித்தான். நான் அந்தப் பெண்ணின் கைப்பையை அவன் மடியில் வைத்து, "இது அம்மாவோடது, பத்தி ரமா பார்த்துக்கோ" என்று சொன்னேன். அவன் என் பக்கம் ஒரு நொடி நேரம் மட்டும் பார்வையைத் திருப்பி விட்டு விளையாட்டைத் தொடர்ந்தான்.

நான் அவனருகே போய் உட்கார்ந்துகொண்டேன். அவன் விளையாடுவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். சலிப்புறும் கண்கள் அவனுக்கு. மன மும்தான் போல. எந்தவொரு விளையாட்டையும் அவன் பொறுமையாகவே விளையாடவில்லை. ஒன்றில் தோற்ற வுடன் அடுத்த விளையாட்டை ஆரம்பித்தான். அதில் முதல் நொடியிலேயே தோற்றாலும் உடனடியாக அடுத்த விளையாட்டுக்குத் தாவினான். நான் பார்த்தபோது 'மரியோ' முதல் முள்செடியிலேயே கடிவாங்க, 'டடட்டடட்டட்டடாய்ங்' என்ற சத்தம் வருவதற்குள் அதை ஒரு விரலால் தள்ளிவிட்டு அடுத்து ஒரு பைக் ரேஸை ஆரம்பித்திருந்தான். பிறகு இன்னொன்று.

அவனுடைய அம்மாவுக்குக் காயங்களைத் துடைத்த செவிலி வெளியே வந்தாள். நான் அவளிடம், "அந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சு?" என்று கேட்டேன். "நீங்க தான் கூட வந்தீங்களா?" என்று அவள் அதிர்ச்சி முக பாவத்துடன் கேட்டதும், நான் அதிர்ந்து, "இல்லல்ல, நான் டாக்டர் ரவிச்சந்திரனோட ஃபிரண்ட்" என்றேன்.

நான் கேட்ட கேள்விக்குச் சம்பந்தமே இல்லாமல், "டாக்டர் உள்ள இருக்காங்க" என்று பதில் சொல்லிவிட் டுப் போனாள் அவள். சற்று நேரத்தில் அருண் என்றழைக் கப்பட்ட இளம் மருத்துவர் இன்னொரு ஆண் ஊழிய ரோடு வெளியே வந்தார். நான் என்னுடைய நாற்காலி யிலிருந்து எழுந்து நிற்கலாமா என்று யோசிப்பதற்குள் அந்த அறையைக் கடந்து வேகமாக வெளியேறினார்கள்.

நான் திரும்பவும் அவன் பக்கம் திரும்பி "அஜய்" என்று கூப்பிட்டேன். அவன் வழக்கம்போல மொபைல் திரை யிலிருந்து கண்ணை எடுக்காமலேயே இருந்தான். அவன் விரல்கள் அதிவேகமாக இயங்கிக்கொண்டிருந்தன. நான் எட்டிப் பார்த்தேன். ஒரு கார் தனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த பல கார்களை இடித்துத் தள்ளியபடி வேகமாக விரைந்தது. நான் அவன் தோள்களை மெல் லத் தொட்டேன். அவன் சட்டென்று திரும்பி எனக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அமர்ந்தான். அடுத்து என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. அறையிலி ருக்கும் வேறு யாராவது என்னையும் அவனையும் கவ னிக்கிறார்களா என்று பார்த்தேன். அவர்களோ தங்க ளது வெறித்த பார்வையைக் கைவிடாமலிருந்தார்கள்.

மெதுவாக எழுந்து இரண்டு இருக்கைகள் தள்ளி அமர்ந்து எனது மொபைல் போனை எடுத்து, வந்திருந்த புது வாட்ஸப் மெஸேஜ்களைத் திறந்து பார்த்தேன். வழக்கமான ஃபார்வர்டு மெஸேஜ்கள். சிலரது வாட்ஸ ப் ஸ்டேடஸ்களைப் பார்த்தேன். பிறகு சலிப்புற்று ஃபேஸ் புக்கைத் திறந்து ரீல்ஸ் வீடியோக்களைப் பார்த்தேன். ஒரு பாடல் சத்தம் ஒலித்ததும் எனது பைக்குள்ளிருந்து ஹெட்செட்டை எடுத்து மாட்டிக்கொண்டு முழு சத்தம் வைத்துக்கொண்டேன். "கள்ளூறப் பார்க்கும் பார்வை உள்ளூறப் பாயுமே" என்கிற பின்னணிப் பாடலுக்கு, மாநிறத்து இளம்பெண் ஒருவரது ரொம்பவே அழகான கண்களைக் க்ளோஸப்பில் காட்டிக்கொண்டிருந் தார்கள். மெல்ல அதில் லயிக்க ஆரம்பித்தேன்.

சுய நினைவு வந்தபோது, கால்களை மடித்து நாற்காலி மேல் வைத்தபடி இன்னும் விளையாடிக்கொண்டுதான் இருந்தான் அவன். நடுவில் பலபேர் உள்ளும் வெளியுமாக நடந்து போய்க்கொண்டு இருந்தார்கள். ஏற்கெனவே இருந்தவர்களில் சிலர் வெளியே போய், புதிதாகச் சிலர் வந்திருந்தார்கள். அவர்களில் யாரிடமாவது அஜயைப் பற்றிச் சொல்லி அவனை ஒப்படைக்க வேண்டும், அவன் அம்மாவுக்கு என்ன ஆனது என்று விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது. அறையிலிருப்பவர்கள் யாரும், யாரி டமும் முகம் கொடுத்துப் பேசுவது போலத் தோன்ற வில்லை, அல்லது வேகவேகமாக ஓடிக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தில் நான் முதலில் பார்த்த செவிலி வெளியே வந்தார். சட்டென்று எழுந்து அவரை மறிப்பது போல நின்று, "அந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சு?" என்று கேட்டேன். "எந்தப் பொண்ணுக்கு, பேஷண்ட் பேரு?"

"இப்போ சுடிதார் போட்டு, தலைல ரத்தமா இருந்ததே?" "ஓ, அந்தப் பொண்ணா? அன்கான்ஷியஸா இருக்காங்க, ஆமா நீங்க யாரு?"

"நான் யாருங்கறது இருக்கட்டும், இந்தப் பையன் அந்தப் பொண்ணுகூட..." நான் பேசிக்கொண்டிருக் கும்போதே உள்ளிருந்து ஏதோ குரல் வர, "இந்தா வர் றேன்" என்று சத்தம் கொடுத்துவிட்டு உள்நோக்கி நகர்ந் தாள். அவளைத்தான் அழைத்தார்களா, இல்லை என்னி மிருந்து தப்பித்து ஓடுகிறாளா என்ற குழப்பத்தில் நான் சோர்வுற்று நாற்காலியில் அமர்ந்தேன். அந்தப் பெண் இறந்துவிட்டது போலவும், அஜய் கவனிக்க ஆளில்லா மல் சாலையில் திரிவது போலவும் கொஞ்ச நேரத்துக்குக் கற்பனைகள் உள்ளுக்குள் கிளர்ந்துகொண்டிருந்தன. எனக்குப் பின் பக்கமிருந்து அருண் என்றழைக்கப்பட்ட இளம் டாக்டர் காத்திருப்பு அறைக்கு உள்ளே வந்தார். நான் அவரிடம், "சார் அந்த தலைல அடிபட்ட பொண்ணு.." என்றேன். "ட்ரீட்மெண்ட் பார்த்துக்கிட்டு இருக்கோம், சொல்லுவாங்க" என்று சொல்லிவிட்டு, என் பதிலுக் குக் காத்திராமல் உள்ளே போனார். எனக்கு, "டேய்" என்று சத்தமாகக் கத்த வேண்டும் போலிருந்தது.

அவர் உள்ளே போவதற்கும் என் மனைவி வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. "நடுவுல ஏதோ ஆக்ஸி டண்ட் கேஸ், ஃபர்ஸ்ட் எய்ட் பண்ணும்போதே அன்கா ஷியஸ் ஆயிருச்சு, சீரியஸ் கேஸுனு வெளியே போய்ட் டாரு. அதான் இவ்ளோ லேட்டு, போலாமா?" என்றாள்.

நான், "அந்தப் பொண்ணு இப்ப எப்படி இருக்காம்?" என்று கேட்டேன்.

"எந்தப் பொண்ணு?" என்றாள் ஆச்சரியமாக.

"அதான் அந்த ஆக்ஸிடண்ட் கேஸ், அன்காஷியஸ் ஆச்சுல்ல?" என்றேன். "ஓ! அது பொண்ணா, அதுவே எனக்குத் தெரியல, ஐ டோண்ட் நோ" என்றாள்.

பிறகு குரலைத் தழைத்துக்கொண்டு, "பொறுப் பெடுத் துக்க அவர் தயாரா இல்ல, கவர்மெண்ட் விவகாரம், நாளைப்பின்ன ஏதாவது பிரச்சினையாச்சுன்னா என் தலைதான் உருளும்ங்கறாரு, நானும் தலைகீழா நின்னு பார்த்துட்டேன், நடக்காது" என்றாள்.

நான் அவளிடம், "ஒரு நிமிஷம்" என்று சொல்லிவிட்டு அஜயின் அருகில் போய் நின்றேன். அவன் யூட்யூபைத் திறந்து வேக வேகமாக ஸ்க்ரோல் பண்ணிக்கொண்டி ருந்தான். பிறகு ஒரு வீடியோவை ஓட விட்டான். பிறகு இன்னொன்று, பிறகு இன்னொன்று, சட்டென்று நான் அடிக்கடி கேட்கும் இப்போதைய பாடல் ஒன்று பின்ன ணியில் ஒலித்தது. நான் சில நொடிகள் அப்படியே நின் றேன். இரண்டு நாற்காலிகள் தாண்டி அமர்ந்திருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியிடம், "இவனோட அம்மாவுக்கு அடிபட்டு உள்ள இருக்காங்க, யாராவது வந்தாங்கன்னா.." என்று நான் பேச ஆரம்பிப்பதற்குள், 'எனக்கும் நீ பேசுவதற்கும் சம்பந்தமில்லை' என்பதைப் போல முகத்தைத் திருப்பிக்கொண்டார் அந்த அம்மா. வேறு யாரிடம் சொல்லலாம் என்று யோசித்தேன். ஒவ் வொருவரும் ஒவ்வொரு கனவுலகத்தில் இருப்பது போல இருந்தது. நான் என் மனைவியின் பக்கம் திரும்ப எத்தனிக் கையில் அவனது மொபைல் போன் 'க்ளிங், க்ளிங்' என்று சத்தம் கொடுத்தது. நான் பார்த்துக்கொண்டிருந்த போதே பேட்டரி தீர்ந்து, அதன் திரை அணைந்தது.

அஜய், "அச்சச்சோ.." என்றான். பிறகு என் கண்களை, நேருக்கு நேராகப் பார்த்து, தெளிவான குரலில், "அங்கிள்.. உங்ககிட்ட டைப் சி சார்ஜர் இருக்கா?" என்றான். அவன் குரலில் அப்படியொரு குழைவும், குழந்தைமையும் வெளிப்பட்டது. மீண்டுமொருமுறை அவனைச் சப்பென்று அறைய வேண்டும் போலத் தோன்றியது.

நான், "ப்ச்ச் இல்லை" என்றேன். உடனே அசுவாரசி யமான முக பாவத்துக்கு மாறி உதட்டைச் சுழித்தபடி, "இந்த மம்மி எப்பதான் வருவா.. லூசு மம்மி" என்றான். பிறகு முகத்தைத் திருப்பிக்கொண்ட பெண்மணியைப் பார்த்து, "ஆண்ட்டி உங்ககிட்ட டைப் சி சார்ஜர் இருக்கா?" என்றான். அந்த அம்மா, அவனது கேள்விக்கும் வெறித்த பார்வையைப் பதிலளித்தாள். நான் கொஞ்ச நேரம் அமை தியாக இருந்தேன். என் மனைவி, "என்னங்க, கௌம்பு வோம்" என்று கடிகார ரத்தைப் பார்த்தாள். நான் அஜ யின் அருகில் குனிந்து அவனுக்கு ஐசியூடைய கதவின் திசையைக் கை காட்டி, "அங்க போய் யார்கிட்டயாவது கேளு" என்று சொன்னேன். அவன் எழுந்து அந்தச் சுடி தார்ப் பெண்ணின் பிய்ந்து போன செருப்பருகே போய் அதை எட்டி உதைத்தான். அது சற்றுத் தள்ளி விழுந்ததும், "ஊஹூ..." என்று கைதட்டிச் சிரித்தான். நான் என் மனைவி யின் பக்கம் திரும்பி, "ம்ம்ம்... போலாம் வா" என்றேன்.

# ஆழிப் பேரலையில் அழிந்த 'ஆச்சே' தேசத்தின் சுதந்திர கனவு!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**



பல ஆண்டுகளாக 'ஆச்சே' தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவிற்கு எதிராக போராடி , ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்த்துடன் சமாதானத்தை 2005 ஏற்றுக் கொண்டது. விடுதலை வேண்டி போராடி அழிந்த மற்றய இனங்களுக்கும் அச்சே மக்களின் போராட்டம் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது.

ஆச்சே தேசத்தின் விடுதலைக்கான போராட்டம் 1990களின் இறுதியிலும் 2000 இன் ஆரம்ப காலப்பகுதியிலும் மிகத் தீவிரம் அடைந்திருந்தது. ஆயினும் 2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவுகள் ஆச்சேனியர்களையும் இந்தோனேசியர்களையும் சமாதானத்தை நோக்கி சிந்திக்க வைத்தது.

அச்சே மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும் சுதேச அடையாளத்திற்காகவும் சுமார் 29 வருடங்கள் தொடர்ந்து போராடினர். தற்போது இந்தோனேசியாவின் ஆதிக்கத்தில் உள்ள ஆச்சே (Aceh) மாநிலத்தின் வடக்குப் பகுதியிலே சுமத்திரா தீவும் தெற்குப் பகுதியிலே இந்து சமுத்திரமும் அமையப்பெற்றுள்ளன.

கொடிய போரினால் சிந்திய குருதிகளுக்கும், சிதைவடைந்த தேசத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்த வழிகோலியது என்பது உண்மையே.

**சுதந்திர ஆச்சே இயக்கம்**

1976 மற்றும் 2005 க்கு இடையில் சுதந்திர ஆச்சே இயக்கம் -Free Aceh Movement - ஆச்சே மாகாணத்தை சுதந்திரமாக மாற்றும் குறிக்கோளுடன் போராடியது. 2003இல் இந்தோனேசியாவின் ஒரு பாரிய இராணுவ தாக்குதல் நடவடிக்கையும், பின்னர் 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்தியதாக அறிவித்தது. அதன்பின் ஹெல்சிங்கி அமைதி உடன்படிக்கையைக் கொண்டு வந்ததன் மூலம் ஆயுத போராட்டம் முழுமையாக முடிவுற்றது.

ஆச்சே மாநிலம் இந்தோனேசியாவின் மற்ற பகுதிகளுக்கு இடையே கலாச்சார, மத வேறுபாடு உள்ளது. பெரும்பாலான இந்தோனேசியாவில் நடைமுறையில் உள்ள இஸ்லாத்தின் மிகவும் பழமைவாத வடிவமானது ஆச்சேவிலும் பரவலாக நடைமுறையில் உள்ளது. முன்னாள் அதிபர் சுஹார்டோவின் 1965-1998 ஆட்சியில் பரந்த தேசியவாத கொள் கைகள் குறிப்பாக ஆச்சேவில் பிரபலம டையவில்லை. அங்கு ஒருங்கிணைக்கப் பட்ட "இந்தோனேசிய கலாச்சாரத்தை" ஊக்குவிக்கும் மத்திய அரசின் கொள்கை யால் பலர் வெறுப்படைந்தனர்.

ஜகார்த்தாவில் உள்ள தலைவர்கள் ஆச் சேவின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வில்லை. அத்துடன் ஆச்சேவின் உள்ளூர் தேவைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்து சிறிதளவு அல்லது அனுதாபம் கூட காட்டவில்லை என்ற பரவலான உணர்வு இந்த மாகாணத்தில் உள்ளது.

**ஆதிக்க தேசிய மையவாதம்:**

சுஹார்டோ அரசாங்கத்தின் ஆதிக்க தேசிய மையவாதப் போக்குகளை எதிர்த்து, 4 டிசம்பர் 1976 இல் சுதந்திர ஆச்சே இயக் கத்தை உருவாக்கி, சுதந்திரத்தை அறிவிக்க வழிவகுத்தது. "நவ-காலனித்துவ" அரசாங் கத்திடமிருந்து மதம் மற்றும் கலாச்சாரம் ஆச்சேவிற்குள் அதிகரித்து வரும் ஜாவானிய குயேற்றங்களின் முக்கிய அச்சுறுத் தல் களாகின. ஆச்சேவின் கணிசமான இயற்கை வளங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் நியாயமற்ற விநியோகம் சர்ச்சைக்குரிய மற்றொரு விடயமாக இருந்தது.

1979 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தோனேசிய இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகள் ஆச்சே இயக்கத்தை நசுக்கத் தொடங்கியது. அதன் பல தலைவர்கள் நாடுகடத்தப்பட்டனர், பல நூறு பேர் சிறையில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். அத்துடன் சுதந்திர ஆச்சே இயக்கத்தை பின்பற்றுபவர்கள் சிதறடிக்கப்பட்டு நிலத்தடி சிறைக்கு தள்ளப்பட்டனர்.

**லிபிய கடாபியின் ஆதரவு :**

1985 இல், ஆச்சே இயக்கத்திற்கு லிபிய ஆதரவு கிடைக்கப் பெற்றது. ஏகாதிபத்தியம், இனவாதம், சியோனிசம் மற்றும் பாசிசத்திற்கு எதிரான தேசியவாத போராட்டங்களை ஆதரிக்கும் கேணல் கடாபியின் உதவிகளை இவர்களும் பயன்படுத்திக் கொண்டனர். லிபியா பின்னர் ஆச்சே இயக்கத்துக்கு தொடர்ந்து நிதியளித்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் ஆச்சே இயக்கம்ஆட்சேர்ப்பு செய்பவர்களுக்கும், மிகவும் தேவையான இராணுவப் பயிற்சியைப் பெறக்கூடிய ஒரு சரணாலயமாக லிபியா விளங்கியது.

1986 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் லிபியாவால் பயிற்சி பெற்ற போராளிகளின் எண்ணிக்கை சுமார் 1,000 முதல் 2,000 பேர் இருந்ததாகக் கூறினர். அதே சமயம் இந்தோனேசிய இராணுவத்தின் அறிக்கையில் படி 600 முதல் 800 வரை இருப்பதாகக் கூறினர்.

1989 மற்றும் 1998 க்கு இடைப்பட்ட காலகட்டம் இந்தோனேசிய இராணுவத்தின் கொடூரமான நடவடிக்கை சகாப்தம் என அறியப்பட்டது, ஏனெனில் இந்தோனேசிய இராணுவம் அதன் கிளர்ச்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கிவிட்டது. இந்த நடவடிக்கையால் ஒரு கொரில்லாப் படையான ஆச்சே இயக்கத்தை அழிப்பதில் தந்திரோபாயமாக வெற்றி பெற்றாலும், 1998 இன் பிற்பகுதியில் ஜனாதிபதி ஹபிபியின் உத்தரவின்படி இந்தோனேசிய இராணுவம் ஆச்சேவிலிருந்து கிட்டத்தட்ட முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டது. இது பின்னர் ஆச்சே இயக்கம் தன்னை மீண்டும் நிலைநிறுத்த உதவியது. ஆயினும் முக்கியமான ஆச்சே இயக்க தளபதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

**சுஹார்டோவின் வீழ்ச்சி**

1999 ஆம் ஆண்டில், ஜாவாவில் ஏற்பட்ட குழப்பம் மற்றும் சுஹார்டோவின் வீழ்ச்சியால் ஒரு பலமற்ற மத்திய அரசாங்கம் சுதந்திர ஆச்சே இயக்கத்திற்கு ஒரு நன்மையை அளித்தது எனலாம். 1999 இல் துருப்புக்கள் திரும்பப் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், மோசமான பாதுகாப்பு நிலைமையால் மேலும் வீரர்களை மீண்டும் களத்தில் இறக்க வழி வகுத்தது. ஜனாதிபதி மேகாவதி சுகர்னோபுத்ரியின் பதவிக் காலத்தில் 2001-2004 துருப்புக்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்ந்ததாக நம்பப்படுகிறது.

2001 மற் றும் 2002 இல் நடந்த இந்தோனேசிய பாதுகாப்பு படை யின் அடக்குமுறைகளால் பல ஆயிரம் பொதுமக்கள் இறந்தனர். இம்மோதல்களால் 15,000 பேர் வரை கொல்லப்பட்டதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

**ஆச்சேயில் கொடூர இராணுவச் சட்டம்:**

மே 18, 2003 அன்று நள்ளிரவுக்குப் பிறகு, ஜனாதிபதி மேகாவதி சுகர்னோபுத்ரி, 12வது இந்தோனேசிய இராணுவத் தலைவரான ஜெனரல் எண்ட்ரியார்டோனோ சுடர்டோவுக்கு பிரிவினைவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்க அனுமதி வழங்கினார். ஜெனரல் சுதார்டோ ஆச்சேயில் இராணுவச் சட்டத்தை விதித்தார்.

ஜூன் 2003 இல், ஆச்சேவில் உள்ள அனைத்து மக்களையும் வேறுபடுத்துவதற்காக ஒரு புதிய அடையாள அட்டையை அறிவித்தது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் உதவி நிறுவனங்களுக்கு நடவடிக்கைகளை நிறுத்தவும், அப்பகுதியை விட்டு வெளியேறவும் உத்தரவிடப்பட்டது.

இந்தோனேசிய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன. போரின் போது 2,000 பேர் கொல்லப்பட்டதாக முதலில் மதிப் பிடப்பட்டது. ஆனால் சர்வதேச மனித உரிமை குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற மனித உரிமைகள் ஆணையம் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பொது மக்கள் பல்லாயிரம் என்று கூறுனர்.

**இந்தோனேசிய இராணுவ படையெடுப்பு:**

நவம்பர் 2003 இல் இராணுவச் சட்டம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பு அறிக்கையின்படி, இந்தோனேசிய இராணுவம் படை யெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பின் போது பரவலான மனித உரிமை மீறல்களைச் செய்தது. இராணுவச் சட்டத்தின் முதல் ஏழு மாதங்களில் 100,000 க்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர் மற் றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் நடந்ததாக அறிவித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது பரவலான பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்ததாக மலேசியாவில் உள்ள ஆச்சே அகதிகள் தெரிவித்தனர். இந்தோனேசிய இராணுவத்தின் உறுப்பினர்கள் கடினமான விசாரணைகளும், கொடூரமான சித்ரவதைகளையும் மேற்கொண்டதாக கருதப்படுகிறது.

**டோக்கியோ அமைதி பேச்சு:**

இந்தோனேசிய அரசாங்கத்தால் ஆச்சே இயக்கம் சண்டையை முடிவுக்குக் கொண்டு வரவும், இரண்டு வாரங்களுக்குள் ஆச்சேவுக்கு சிறப்பு சுயாட்சியை ஏற்கவும் ஒரு இறுதி எச்சரிக்கையை வெளியிட்டது.

ஸ்வீடனை தளமாகக் கொண்ட ஆச்சே இயக்கத்தின் ஆச்சே இயக்க தலைவர்கள் இறுதி எச்சரிக்கையை ஏற்க மறுத்தனர். ஆனால் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆயுத மோதலைத் தவிர்க்கவும், டோக்கியோவில் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கவும் இரு தரப்பையும் வலியுறுத்தின. மே 16, 2003 அன்று, அரசாங்கம் தன்னாட்சி வழங்குவதே ஆச்சே இயக்கத்துக்கு அளிக்கும் இறுதி சலுகை என்றும், இறுதி எச்சரிக்கையை நிராகரிப்பது இயக்கத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறியது. ஆச்சே இயக்க தலைவர்கள் மற்றும் பேச்சுவார்த்தையாளர்கள் இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்தனர்.

**சுனாமி 2004 பேரழிவு:**

டிசம்பர் 2004 இல் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிறகு, ஆச்சே இயக்கம் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்தது, சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்கள் மோதலைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

சுனாமிக்குப் பிறகு, இந்தோனேசிய அரசாங்கம் ஆச்சே பகுதியை சர்வதேச நிவாரண முயற்சிகளுக்குத் திறந்தது. சுனாமியின் பின்னர் இவ் மோதல் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. முந்தைய சமாதான முயற்சிகள் பலவும் தோல்வியடைந்தன, ஆனால் சுனாமியின் பின் இரு தரப்பும் மோதலில் இராணுவ ரீதியாக வெற்றிபெற இயலாமை மற்றும், குறிப்பாக, இந்தோனேசியாவில் அமைதியைப் பாதுகாக்க ஜனாதிபதி சுசிலோ பாம் பாங் யுதோயோனோவின் விருப்பம் உட்பட பல காரணங்களால், ஒரு சமாதான உடன்படிக்கை எட்டப் பட்டது. இதன்மூலம் 2004 இந்தியப் பெருங்கடல் பூகம்பத்தின் விளைவுடன் ஆச்சேயில் 30 ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தது.

29 வருட போருக்குப் பிறகு 2005ல், சுஹார்டோவிற்குப் பிந்தைய இந்தோனேசியா மற்றும் தாராளவாத-ஜனநாயக சீர்திருத்த காலம் ஆகும். அத்துடன் இந்தோனேசிய இராணுவத்தில் பதவி மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்க உதவியது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மற்றும் துணைத் தலைவர் ஜூசுஃப் கல்லா ஆகியோரின் அமைதி தீர்வுக்கான பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கவை.

அதே நேரத்தில், ஆச்சே இயக்க தலைமை தனக்கு கிடைக்கக்கூடிய விருப்பங்களை மறுபரிசீலனை செய்தது, மேலும் இந்தோனேசிய இராணுவம் கிளர்ச்சி இயக்கத்தை கணிசமான அழுத்தத்திற்கு உட்படுத்தியது, இது ஆச்சே இயக்கம் முழு சுதந்திரம் இல்லாத முடிவை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தியது.

முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டி அஹ்திசாரி தலைமையில், நெருக்கடி மேலாண்மை முன்முயற்சியால் சமாதானப் பேச்சுக்கள் எளிதாக்கப்பட்டன. இதன் விளைவாக அமைதி ஒப்பந்தம் 15 ஆகஸ்ட் 2005 அன்று கையொப்பமிடப்பட்டது. ஒப்பந்தத்தின் கீழ், இந்தோனேசியா குடியரசின் கீழ் ஆச்சே சிறப்பு சுயாட்சியைப் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C    2) E    3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16    2) 15    3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்    2) நிஷான்    3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13    2) 14    3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்    2) செவ்வகம்    3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm    2) 18cm    3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3    2) 2    3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14    2) 10    3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ    2) ஆ    3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்    2) 3 தடவைகள்    3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள்    2) 5 தடவைகள்    3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2    2) 3    3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**18.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**18.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் வேண்டாம்

## மக்கள் பேரெழுச்சி இயக்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 18

”மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் தேட வேண்டாம்” - என்று “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை” மக்கள் பேரெழுச்சி இயக்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

”தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில் மிக முக்கிய திருப்பத்தை ஏற்படுத்திய அகிம்சைப் போராட்டத்தின் உச்சத்தினை தொட்டவர் தியாகி திலீபன். பன்னிரெண்டு நாட்களாக நீர், ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தமிழ் இனத்தின் விடுதலை தீயை ஏற்றி வைத்தவர். காந்திய தேசத்திற்கே அகிம்சையை போதித்த தலைமகன்.

இவ்வாறாக தியாகத்தின் சிகரமான திலீபன் அவர்களின் 35 ஆவது ஆண்டு நினைவு நாட்களின் ஆரம்ப தினமான 15.09.2022 அன்றும், அதற்கு முன்பாக நடைபெற்ற ஒழுங்குபடுத்தல் நிகழ்வுகளின் போதும் இடம்பெற்ற கட்சி அரசியல் ரீதியான முறுகல் நிலை, தமிழ் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட அனைவருக்கும் அதிர்ச்சியையும் கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

தியாகி திலீபன் அறப்போரினை நடத்தி ஆகுதியான நல்லூர் மண்ணிலேயே இச்சம்பவங்கள் நடைபெற்றது மிக வேதனை அளிப்பதாக உள்ளது. அளவிட முடியாத தியாகத்தினை எவருமே தமது வாக்கு அரசியலுக்கு பயன்படுத்துவதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அத்துடன் நினைவு நிகழ்வின் போது ஒரு மாவீரரின் தந்தையும், தியாகி திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கூட இருந்தவரும், நீண்ட நெடிய போராட்ட வரலாற்றைக் கொண்ட மூத்த போராளியுமான ஒருவர் அவமதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒரு மாவீரரின் வணக்க நிகழ்வில் இன்னொரு மூத்த போராளியை அவமதிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

35 வருடங்கள் கடந்தும் தியாகி திலீபனின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், எமது உரிமைகளை இழந்து, எமது நிலங்கள் எங்கள் எதிரியினால் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படும் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளோம். தமிழினமே ஓரணியாக அணிதிரண்டு போராட வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கான பொதுக் கட்டமைப்பு தொடர்பான முன்னெடுப்புகள் நடைபெறுவதாக அறிகின்றோம். ஆயினும், நாம் மேலே குறிப்பிட்டது போல் நினைவெழுச்சி நிகழ்வுகள், அதற்கான பொதுக்கட்டமைப்பு என்பன கட்சி அரசியலை கடந்து பொது சமூகமாகிய மாவீரர்களின் பெற்றோர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், மத தலைவர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பொது மக்கள் அடங்கியவர்களின் முன்னெடுப்பிலேயே கட்டமைக்கப்பட வேண்டும்.” - என்றுள்ளது. (அ)

# மின்கட்டணத்துக்கு எதிராக மதகுருமார்கள் போராட்டம்

கொழும்பு, செப். 18

மத வழிபாட்டுத் தலங்களைப் பாதித்துள்ள அநீதியான மின்சாரக் கட்டணத்தை நிவர்த்தி செய்யக் கோரியும், மக்கள் மீதான மின்கட்டண சுமையை நிறுத்தக் கோரியும் எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பு,கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சகல மதத் தலைவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மதகுருமார்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும், மின்சாரக் கட்டணத்தை நியாயமான முறையில் சீர்செய்யுமாறு கோரி எதிர்வரும் 21ஆம் திகதி சமயப் பிரதிநிதிகள் மின்சக்தி அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் தவறுகளுக்கு நட்டஈடாக வழிபாட்டுத் தலங்கள், ஏழைகள், சிறு தொழில்களில் ஈடுபடும் மக்கள் மின்சாரக் கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ)

# இரண்டு பதில் அமைச்சர்கள் ஜனாதிபதியினால் நியமனம்

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு பதில் அமைச்சர்களை நியமித்துள்ளார்.

அதன்படி, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளுக்கான பதில் அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக திலும் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி பிரித்தானியாவுக்குச் செல்லவுள்ள நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஜனாதிபதி உரிய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வரை இந்த நியமனம் செல்லுபடியாகும்.

நிதி இராஜாங்க அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும், முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சராக திலும் அமுனுகமவும் தற்போது செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடலில் உடைந்து விழுந்த இரும்புப் பாலம் அனல் மின்சார நிலையத் தொழிலாளி பலி!

கொழும்பு, செப். 18



நுரைச்சோலை அனல் மின்சார நிலையத் தொழிலாளர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

புத்தளம் நுரைச்சோலை “லக் விஜய”அனல் மின்சார நிலையத்தில் அமைந்துள்ள இரும்புப் பாலம் உடைந்து கடலில் வீழ்ந்தபோது இரும்புப் பாலத்தை திருத்தும் பணியில் ஈடுபட்ட தொழிலாளரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இரும்புப் பாலத்தைத் திருத்தி, வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆனமடுவ, பள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த, இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஹேமந்த ஹர்ஷ (வயது 32) என்பவரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவரோடு திருத்தும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இரும்புப் பாலம் உடைந்து கீழே விழுந்தபோது உடனடியாகச் செயற்பட்டு அவர்களும் கடலில் பாய்ந்து அவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், அந்த முயற்சி பலனளிக்கவில்லை.

இதையடுத்து கடற்படையினரும், அனல் மின்சாரத்தில் பணிபுரியும் சுழியோடிகளும் இணைந்து அவரது சடலத்தைப் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# இருபாலையில் புலிகளின் புதையல் தேடி நடைபெற்ற அகழ்வு பணி இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், செப். 18



யாழ்ப்பாணம் இருபாலை டச்சு வீதியில் உள்ள வீடொன்றில் விடுதலைப்புலிகள் அமைப்பினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் புதையலை அகழும் பணிகள் நேற்று பிற்பகல் 2 மணியுடன் நிறுத்தப்பட்டது.

இருபாலை டச்சு வீதியில் உள்ள வீடொன் றின் வளாகத்துக்குள் தங்க நகைகள் புதைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்து 6 பேர் அகழ்வுப் பணிக்கு தயாராகிய நிலையில் பொலிஸ் புல னாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இராணுவத்தில் உள்ளவர்களும் அடங்கியிருந்தனர்.

குறித்த வீட்டில் புதையலை அகழ்வதற்கான அனுமதியினை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் கோரி இருந்தனர்.

நீதிமன்ற அனுமதி கிடைக்கப்பெற்ற நிலையில் நேற்று காலை 9.30 முதல் மதியம் 2 மணி வரையில் புதையல் அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

புதையல் அகழ்வதற்காக விசேட அணியினர் வந்திருந்த நிலையில் , அகழ்வு பணிகளுக்காக கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

மதியம் 2 மணி வரையில் அகழ்வுப் பணிகள் யாழ்ப்பாண நீதவான் முன்னிலையில் இடம்பெற்ற போதும், எவ்விதமான பொருட்களும் மீட்கப்படாத நிலையில் அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன. (அ)

# ஜனாதிபதியின் கீழ் இருந்த பல நிறுவனங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கு மாற்றம்

கொழும்பு, செப். 18

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சகத்தின் கீழ் இருந்த பல நிறுவனங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதன்படி, நிதி அமைச்சராக ஜனாதிபதியின் கீழ் இருந்த முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் துறைமுக நகர ஆணைக்குழு என்பன முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும், முதலீட்டு ஊக்குவிப்புக்காக அமைச்சர் எவரும் நியமிக்கப்படாததால், அந்த அமைச்சு தொடர்ந்தும் ஜனாதிபதியின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலின் ஜாதகம் பலமாம்!

## ஆட்சியிலிருந்து நீக்கமுடியாதென்கிறார் பிரபல ஜோதிடர்

கொழும்பு, செப். 18

2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கு எந்தவொரு நபரோ அல்லது அதிகாரக் குழுவோ முயற்சித்தால் அது பாரிய இரத்தக்களரியில் முடிவடையும் என கருணாரத்ன இணையமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இணைய அலைவரிசையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளதுடன் இலங்கை அரசியல் தொடர்பில் பல கணிப்புகளையும் வெளியிட்டுள்ளார். (அ)

## ஜனாதிபதி...

கடுமையான அழுத்தங்கள் காரணமாக புதிய அமைச்சரவை பதவியேற்பது நாளுக்கு நாள் தாமதமாகி வந்ததாகக் கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவை அடுத்த மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிக்குள் பதவியேற்கும் எனவும் அவ்வாறு அமைச்சரவை பதவியேற்க முடியாது போனால், அரசாங்கத்தின் இருப்பு பெரும் நெருக்கடிக்கு உள்ளாக கூடும் எனவும் பேசப்படுகிறது.

அதேவேளை புதிய அமைச்சரவையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு மாத்திரம் அமைச்சு பதவி கிடைக்காது என தெரிவிக்கப்படுகிறது.

நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சு பதவி வழங்கப்படவேண்டும் என பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் அழுத்தம் கொடுத்த போதிலும் அந்த கட்சியை சேர்ந்த ஒரு அணி, நாமல் இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சராக நியமிக்கப்படுவது பொருத்தமற்றது என்ற கடும் நிலைப்பாட்டில் இருப்பதால், அவரை அமைச்சராக நியமிப்பதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்ப்புகளை எதிர்நோக்கி வந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித்த அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம்.சந்திரசேன, சரத் வீரசேகர ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அந்த பதவிக்கு கொண்டு வருவதற்காக திரைக்கு பின்னால் இருந்து பெரும் பங்காற்றியதாக கூறப்படும் ஐக்கிய தேசியக்கட்சியின் வஜிர அபேவர்தனவுக்கு முக்கியமான அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவி வழங்கப்படும் என கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவையின் எண்ணிக்கை 35க்கும் மேற்பட்டதாக இருக்கலாம் எனத் தகவல்கள் கூறுகின்றன.

## கோட்டாவை,...

கோட்டாபய பாராளுமன்றத்துக்கு வந்தால் அவரை பிரதமராக நியமிக்க எம்.பிக்கள் குழுவொன்றும் முயற்சித்து வருகின்றதுடன், அண்மைய நாட்களில் ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் பகிரங்கமாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் கோட்டாபய இப்போது அரசியலுக்கு வருவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடியோடு விரும்பவில்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன.

எவ்வாறாயினும், முடிந்தவரை அரசியல் விவகாரங்களில் இருந்து விலகி இருக்கவேண்டும் என்பதே முன்னாள் ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் எனவும் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் 2015ஆம் ஆண்டு தோல்வியின் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க முயற்சித்த போதிலும், ஆதரவாளர்கள் உறவினர்களின் பலமான வேண்டுகோளின் காரணமாக மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட நேரிட்டது. (அ)

## திலீபன்...

பொன்றை உருவாக்கி அதன் ஊடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி,மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

“அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பாக இது உருவாகவேண்டும். அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கு அப்பால் இக் கட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்படவேண்டும்” என்பதே பலரின் கோரிக்கையாக இருந்தது.

கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் கருத்து பகிர்வுகளை தொடர்ந்து முதல் கட்டமாக பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும் மூத்த போராளியான பஷீர் காக்கா தலைமையில் மூத்த போராளிகள் , பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதி உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது எதிர்வரும் நாட்களில் மதகுருமார்கள் , அரசியல் கட்சித் தலைவர்கள் , பாராளுமன்ற உறுப்பினர்கள் , வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள் , பொது அமைப்புக்கள் என அனைத்து தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் , அதன் நோக்கம் , எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி அவர்களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. (அ)

## தமிழ் அரசியல்...

உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்ததுடன் தங்கள் போராட்டத்தையும் கைவிடுவதாக தெரிவித்தனர்.

ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொலைபேசி வாயிலாக உண்ணாவிரதம் இருக்கும் சிறைக்கைதிகளுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்ட கைதிகளின் உறவினர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் வாக்குறுதிக்கமைய நேற்று சனிக்கிழமை மதியம் போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த 2017 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதிகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 12 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மகசின் சிறைச்சாலையில் செப்ரெம்பர் 06ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இளைஞர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் உடல்நிலை மோசமாவதை கருத்திற்கொண்டு தகுந்த வாக்குறுதியை அவர்களுக்கு வழங்கி உணவுத் தவிர்ப்பை முடிவுறுத்தி பிணையிலோ பொதுமன்னிப்பிலோ விடுதலை செய்யுமாறு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 5 ஆயிரம் இலங்கை பணியாளர்களை தென்கொரியாவுக்கு அனுப்ப திட்டம்

கொழும்பு, செப். 18

இவ்வருட இறுதிக்குள் சுமார் 5000 இலங்கை பணியாளர்கள் தென் கொரியாவிற்கு அனுப்பப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் ஏற்கனவே சுமார் 3000 பேர் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி யாப்பா தெரிவித்தார். இரண்டு வாரத்திற்குள் 200 பணியா ளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த வருடத்தில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகமானோர் தொழிலுக்காக செல்லுகின்ற நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கும் தொழிலுக்காக செல்வோரின் வீதம் முன்னரை விட அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி யாப்பா சுட்டிக்காட்டினார்.

# பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் தகுதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உள்ளதா?

## கேள்வி எழுப்புகின்றார் சுகாஷ்

யாழ்ப்பாணம், செப். 18

“பொதுக் கட்டமைப்பு” என்பது அரசியல் சாராத பொதுவான - நடுநிலையான தரப்புக்களால் உருவாக்கப்படுவது. அரசியல் சார்ந்த, அதுவும் தியாக தீபத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் நேரெதிரான முரணான கொள்கைகளைக் கொண்டவர்களால் அமைந்துள்ள யாழ்.மாநகர சபைக்குத் தியாக தீபத்திற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் தார்மீக ரீதியான தகுதியோ அருகதையோ கிஞ்சித்தும் உண்டா? என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கே. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

தியாக தீபத்தை நினைவேந்துவதற்கான உண்மையான பற்றினால் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால், அதற்கான ஏற்பாடுகள் நினைவேந்தல் நாட்கள் ஆரம்பமாக முன்னரே செய்யப்பட்டிருக்குமா? அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் குழுவினால் நினைவேந்தல் ஒழுங்கமைப்புகள் செய்யப்பட்டு நினைவேந்தல் நடைபெற்றுவரும் நிலையில் இடையில் குழப்பும் வகையில் செய்யப்படுமா?

2017 முதல் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக நினைவேந்தலைக் கிரமமாகச் செய்துவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குழப்பவாதிகளா? அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஒழுங்கமைக்கப்பட்ட நினைவேந்தலுக்குள் இடையில் வந்துபுகுந்த யாழ் மாநகர சபையின் அரச ஆதரவுக் குழுக்கள் குழப்பவாதிகளா?

மக்களே தீர்மானிக்கட்டும்-என்றுள்ளது. (அ)

# அரிசி இறக்குமதியை நிறுத்தக் கோரிக்கை

கொழும்பு, செப். 18

நாட்டுக்கு தேவை யான அரிசி கையிருப் பில் உள்ளமையினால் அரிசி இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக வாணிபம் மற் றும் உணவு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு இந்த கோரிக்கையை விடுத்துள்ளது. சிறு போகத்தில் எதிர்பார்த் ததை விடவும் அறுவடை கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. இதன் காரணமாக இந்த ஆண்டு 6 இலட்சம் மெற்றிக் டன் அரிசி மாத்திரமே இறக்குமதி செய்யப்பட வேண்டும் என விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஸ்பகுமார தெரிவித்தார்.

## கோணேஸ்வர...

கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள இந்து மாமன்றத்தின் அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் ஒன்றுகூடிய சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க, தேவார பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் ஆலய நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கிலான முதல் நடவடிக்கையாக இந்த யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது. (அ)

## கௌரவமான...

டம் நேற்று வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்தின் புளியங்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

இச்செயற்றிட்டத்தில் நெடுங்கேணி பிரதேச மக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாய, நன்னீர் மீனவ அமைப்புக்கள், என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை, இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம், எமக்கு வேண்டும் எங்கள் நிலம், ஒன்று கூடுவது எமது உரிமை, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் போன்ற பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (அ)

## மேலும் 3.5...

டொலர்களையும் சேர்த்து 6.5 மில்லியன் டொலர்களை ஜப்பான், இலங்கைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்காக வழங்கியுள்ளது.

இந்த உதவிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்,ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஆகியவற்றின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இதேவேளை, ஜப்பானுடன் நீண்டகால மற்றும் இணக்கமான உறவுகளைக் கொண்டுள்ள இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கு இந்த உதவி பங்களிக்கும் என்று ஜப்பான் அரசு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

## பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளராக ரஞ்சித் பண்டார?

### தூக்கப்படுகின்றார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, செப். 18

பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவிக்கு நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பொதுஜன பெரமுனவின் தவிசாளராக பதவி வகித்து வரும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எதிர்க் கட்சி எம்.பியாக செயற்பட்டுவரும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அவரைக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி அந்த பதவிக்கு வேறொரு பேராசிரியரை நியமிப்பதே பொருத்தமானது என கட்சியில் பலரது கருத்தும் நிலவுகிறது.

அத்துடன், கோப் குழு தலைவர் பதவிக்கு பேராசிரியர் ரஞ்சித் பண்டார பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஞ்சித் பண்டார தற்போது பல நாடாளுமன்றக் குழுக்களின் அங்கத்தவராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ரஷ்யப் படைகளிடம் சிக்கியிருந்த ஏழு இலங்கை மாணவர்கள் மீட்பு



கீவ், செப். 18

கார்கிவ் நகரில் மார்ச் மாதம் முதல் ஆக்கிரமிப்பு ரஷ்யப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு இலங்கை மாணவர்களை உக்ரைன் படையினர் மீட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கார்கிவ் நகரை ஆக்கிரமித்த வேளை ரஷ்யப் படைகளால் சிறை பிடிக்கப்பட்டிருந்த பொதுமக்கள் பலர் அந்நகரம் மீட்கப்பட்ட போது உக்ரைன் படைகளால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அவர்களில் ஏழு இலங்கை பிரஜைகளும் அடங்குவதாகவும் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்ட காணொளி உரையில் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட மாணவர்கள் உக்ரைன் குப்யான்ஸ்க் மருத்துவ கல்லூரியில் கல்வி பயின்ற வேளை ரஷ்ய படையினரிடம் சிக்கி தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். அவர்கள் நிலக்கீழ் குழிகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் ஜெலென்ஸ்கி கூறினார்.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட நகரங்களில் சித்திரவதை கூடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்யப் படைகளால் ஆக்கிமிக்கப்பட்டிருந்த கார்கிவ் பகுதியில் முக்கிய போர் முனையான இசியம் நகர் உள்ளிட்ட பல பகுதிகள் அண்மையில் உக்ரைன் படைகளால் மீளக் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பெரும் மனித புதை குழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின்போது அங்கு பல படுகொலைகள் நடந்திருப்பது தெரியவருவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுனாமிக்கு முந்திய அமைதியாக மக்கள் போராட்டம் தணிந்துள்ளது

### சஜித் அணி சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 18

“இலங்கையில் தற்போது அமைதியாகியுள்ள மக்களின் ஆர்ப்பாட்டம் பின்னர் பாரதூரமான போராட்டமாக வெடிக்கும். சுனாமி ஏற்பட முன்னர் கடல் அலைகள் அமைதியடைவைப் போன்று, தற் போது தணிந்துள்ள ஆர்ப்பாட்டங்கள் பாரிய அலையாக மீண்டும் வெளியாகும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்க செனட் சபையில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிராக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பழிவாங்கும் செயற்பாடுகளை அரசு இன்னும் கைவிடவில்லை.

அரசின் பழிவாங்கல் செயற்பாடுகளை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். தற்போது அமைதியாகியுள்ள மக்களின் ஆர்ப்பாட்டம் பின்னர் பாரதூரமான போராட்டமாக வெடிக்கும்.

சுனாமி ஏற்பட முன்னர் கடல் அலைகள் அமைதியடைவைப் போன்று, தற்போது தணிந்துள்ள ஆர்ப்பாட்டங்கள் பாரிய அலையாக மீண்டும் வெளியாகும்.

நாட்டில் சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்கு ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசில் ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வகட்சி அரசை அமைப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஆனால், தற்போதைய அரசுக்குள்ளேயே அமைச்சர்கள் ஒற்றுமையின்றி செயற்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

நிலக்கரி இறக்குமதியில் ஏற்பட்டுள்ள சிக்கலால் அடுத்த மாதம் 10-12 மணித்தியாலங்கள் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

அரசால் தொடர்ச்சியாக மக்களுக்கு இவ்வாறான நெருக்கடிகளே ஏற்படுத்தப்படுகின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எந்தவொரு தேர்தலிலும் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெருமளவான தொகுதிகளை நாம் கைப்பற்றுவோம். பொதுத் தேர்தலில் எமது வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் அமையும்-என்றார். (அ)

## சேவைக்கு விடைகொடுக்கும் 1,280 பொலிஸ் அதிகாரிகள்!

கொழும்பு, செப். 18

60 வயதை கடந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல்வேறு நிலைகளில் உள்ள 1,280 உத்தியோகத்தர்கள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் ஓய்வுபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வுபெற உள்ள அதிகாரிகளில் இரு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள் 8 பேர், 17 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 21 உப பொலிஸ் அதிகாரிகள் 21 பேர் மற்றும் 35 பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் இந்த குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அரசாங்க ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வு வயதெல்லை 60 என சமீபத்தில் அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேர்தலை ஒத்திவைக்க முயற்சி!

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 18

தேர்தல் திருத்தம் கொண்டு வர சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற பேச்சின் அடிப்படையில் தேர்தலை ஒத்திவைக் கும் முயற்சி நடப்பதாக சந்தேகம் எழுந்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல் முறைமையில் திருத்தங்களைக் கொண்டு வருவது மிகவும் நல்லது என்றாலும், திருத்தம் தொடர்பான தெளிவான பிரேரணை நாட்டுக்கு முன்வைக்கப்படவில்லை.

இதுவரையில் அவ்வாறான வரைவு எதுவும் தயாரிக்கப்படவில்லை எனவும், ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் மாத்திரமே நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளதாகவும், ஆனால் எதிர்க்கட்சிகள் எவரும் அதில் கையொப்பமிடவில்லை எனவும் அவர் கூறினார்.

தேர்தல் முறைமை திருத்தப்பட வேண்டும் என்பது உண்மையே. ஆனால் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFEE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்




**இரவு**
07.00 மணி : SPOTLIGHT- பா.கஜதீபன்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை - அருட்தந்தை சக்கிவேல் அடிகளார்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு